RE/MAX BLUE FORCE · TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 23 செப்டம்பர் 2022 இதழ்:- 22

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இரண்டாவது நகல் மேலும் வலுவிழக்கிறது?



ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பூச்சிய வரைவின் இரண்டாவது நகல் இலங்கை தொடர்பான தீர்மானங்களை நீர்த்துப் போக செய்யும் தன்மை கொண்டது என்று செயல்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர் மேலும், திருத்தப்பட்ட புதிய வரைவில் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சிறிதளவும் இல்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (3ம் பக்கம் பார்க்க)

## மகாராணியின் இறுதிச் சடங்கிற்கு சென்று ஆடம்பர விடுதியில் பியானோ வாசித்த கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ



இங்கிலாந்தின் மகாராணி இரண்டாம் எலிசபெத் உடல் நலக்குறைவால் கடந்த 8 ஆம் திகதி மரணம் அடைந்தார். அவரின் இறுதி சடங்கு லண்டனில் 19 செப் 2022 நடைபெற்றது. இதில் உலக தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். அந்த வகையில் கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவும் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதி சடங்கில் பங்கேற்றார். இந்த நிலையில் ராணியின் இறுதி சடங்குக்கு முன்பாக ஜஸ்ரின் ட்ரூடோ லண்டனில் உள்ள ஒரு ஆடம்பர விடுதியில் இசைக்கலைஞர்களுடன் சேர்ந்து பியானே வாசித்தபடி மகிழ்ச்சியாக பாடல் பாடும் (22ம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவரின் வீட்டையும் காணியையும் பராமரிக்க முடியாத வல்வை நகரசபை சிவப்பு எச்சரிக்கை!

யாழ்.வல்வெட்டித்துறையில் உள்ள தமிழீழ விடுதலை புலிகளின் தலைவரின் வீட்டு காணிக்கு வல்வெட்டித்துறை நகரசபையினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. காணியில் இருந்த வீடு முற்றாக அடித்து(5ம் பக்கம்பார்க்க)



## பின்னடைவு குறித்த மறுபரிசீலனை இல்லாத மந்தைச் சமூகம்!

**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!**
**உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



18 Years Real Estate Experience

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!


**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6



• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence / Morningside

**Scarborough** $499,800
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route


### Sheppard / Markham

**Scarborough** $449,900
Bedrooms: 2 Washrooms: 1
Beautiful Well Maintained Space


### Sheppard & Warden


**Scarborough** $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony


### 401 & Mccowan


**Mississauga** $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Ttc Bus Within Walking Distance

### Warden & St Clair

**Scarborough** $629,000
Bedrooms: 2+1 Washrooms: 1
792 Sf Of Low-Rise Condo

### Markham & Eglinton

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Appliances


### John W Taylor / Ferris Lane

**New Tecumseth** $839,000
Bedrooms: 4 Washrooms: 3
Open Concept, H/Wood Floors

### Simcoe & Ritson

**Oshawa** $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors

### Altona / Finch

**Pickering** $979,000
Bedrooms: 3 Washrooms: 4
Brand New Double Car Garage


### Harmony & Taunton

**Oshawa** $1,224,888
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Schools, Shop


### Donald Cousens & Hwy 7

**Markham** $1,488,888
Bedrooms: 4 Washrooms: 4
Less7 Yrs Old Beautiful 9Ft Ceilings

### Hwy 48/Castlemore


**Markham** $3,600
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Go Train Station

### Hwy 7/Donald Cousens


**Markham** $3,500
Bedrooms: 4 Washrooms: 3
Approx. 2500 Sq Ft

### Church / Rossland


**Ajax** $3,175
Bedrooms: 4 Washrooms: 3
Family Friendly Neighbourhood

### Edenbrookhill / Sandalwood


**Brampton** $1,800
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Markham Rd & 16th Ave


**Markham** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout; 9 Feet Ceiling

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இரண்டாவது நகல் மேலும் வலுவிழக்கிறது?

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பூச்சிய வரைவின் இரண்டாவது நகல் இலங்கை தொடர்பான தீர்மானங்களை நீர்த்துப் போக செய்யும் தன்மை கொண்டது என்று செயல்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்மேலும், திருத்தப்பட்ட புதிய வரைவில் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சிறிதளவும் இல்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளான கோர் நாடுகள் எனப்படும் பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மலாவி, மொன்டினீக்ரோ வடக்கு மசிடோனியா நாடுகள் முன் வைக்கவுள்ள பூச்சிய வரைவின் இரண் டாவது நகல் 20 செப்டம்பர் 2022 பகிரங்கமானது.

அந்த வரைவில், இலங்கையின் பொரு ளாதாரம் குறித்து குறிப்பிடப்படும் இடத்தில் 'மீண்டும் நிகழும் நிகழ்வுகள்' என தெரிவிக்கப்பட்டிருந்த விடயம் நீக்கப்பட்டுள்ளது. விசாரணை செய்வ தன் மூலமும் தேவைப்பட்டால் ஊழலு க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதன் மூலமும் தற்போதைய பொருளதார நெருக்கடிக்கு தீர்வைக் காணுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள் கின்றோம். இந்த விடயத்தில் சுதந்திர மான பக்கச் சார்பற்ற வெளிப்படையான முயற்சிகளுக்கு உதவ தயாராகவுள்ளோம் என்றும் இரண்டாவது நகல்வடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இராணுவமயப்படுத்தல் குறித்த விடயங்களிலும் மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. சிவில் நிர்வாக செயல்பாடுகளை இராணுவ மயப்படுத்தலில் இருந்து பாதுகாத்தல் என்பதற்கு பதில் அரசாங்க நடவடிக்கைகளை தொடர்ச்சியாக இராணுவ மயப்படுத்தல் என குறிப்பிடப்பட்டுள்ளது. நீண்டகால துயரங்களுக்கு தீர்வை காணுதல் என்பது நீக்கப்பட்டு வெறுமனே தமிழ், முஸ்லிம்களின் துயரங்கள் என குறிப் பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தீர்மானம், தற்போது நீடித்த உள்நாட்டு இடப்பெயர்வின் சிக்கல்களை – காணி தகராறுகளை எடுத்துக் காட்டுகின்றது. பத்திரிகை யாளர்கள், சிவில் சமூக செயல்பாட்டா ளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும் பங்கள் மற்றும் நினைவேந்தல் முயற்சி யில் ஈடுபட்டவர்கள் துன்புறுத்தப்படு வது தொடரும் பாலியல் வன்முறைகள் குறித்தும் தீர்மானம் எடுத்துக்கூறுகின்றது.

தீர்மானத்தின் மொழியும் இலங்கைக்கு இணக்கமாக காணப்படும் விதத்தில் திருத்தப்பட்டுள்ளது. இவை தவிர, காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த அலுவலகத்தை மீள வலுப்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுப்ப தற்கு பதில் நகல்வடிவம் பயனுள்ள சுயாதீனமான செயல்பாடுகளுக்கு அழை ப்பு விடுத்துள்ளது.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு அரசியல் நியமனங்கள் மேற்கொள்ளப் பட்டதை தொடர்ந்து வெளியான சர்வதேச கண்டனங்கள் காரணமாக சுயாதீனம் என்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் பொலிஸ் மா அதிபரை காணாமல் ஆக்கப்பட் டோர் அலுவலகத்தின் உறுப்பினராக பாராளுமன்ற தெரிவு குழு வெளியிட்டி

# குருந்தூர்மலை காணி அபகரிப்பு! பொதுமககள் திரண்டு ஆர்ப்பாட்டம்!



குருந்தூர்மலை – தண்ணிமுறிப்பு – குமுழமுனை கிராமங்களில் தமிழ் மக்க ளுக்கு சொந்தமான 632ஏக்கர் காணியை தொல்லியல் திணைக்களம் சுவீககரித்தல், நீதிமன்ற கட்டளையை மீறி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றமை க்கு எதிராக குருந்தூர்மலையில் 20 செப்டம்பர் 2022 புதன்கிழமை போராட் டம் நடத்தப்பட்டது.

குருந்தூர்மலை ஆதிசிவன் கோயில் (தற்போது பௌத்த விகாரை அமை க்கப்படும்) குன்றின் அடிவாரத்தில் ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கானவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் எமது நிலம் எமக்கு வேண்டும் இனப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கோடு எங்கள் தாய் நிலத்தை ஆக்கிரமிக்காதே தொல்லியல் திணைக்களம் என்பது தமிழர் நிலங்களை திட்டமிட்டு அப கரிக்கும் திணைக்களம் எங்களுக்கு எங்கள் நிலங்களில் வாழ்க்கை இல் லையா? தமிழர் தாயகத்தில் தொடர்ச்சி யாக கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலையை மேற்கொண்டு வருகிறது பேரினவாதம் தண்ணிமுறிப்பு எங்கள்

பூர்வீக தாய்நிலம் என்று எழுதப்பட்ட பதாகைகளை மும்மொழிகளிலும் ஏந்தியிருந்தனர். அத்துடன் அது தொடர்பான கோஷங்களையும் எழுப்பி னர். இவ்வாறு கோஷங்களை எழுப்பிய மக்கள், ஆதி சிவன் கோயில் பகுதியை ஆக்கிரமித்து நீதிமன்ற கட்டளையை யும் மீறி அமைக்கப்பட்டு வரும் விகாரை பகுதிக்கு சென்று அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்தச் சமயமும் நீதிமன்ற கட்டளையை மீறி கட்டுமானம் இடம் பெற்று வருவதை அவதானித்தனர்.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொல்லியல் திணைக்கள உத்தியோகத் தர்களிடம் கேள்வி எழுப்பினர். இதையடு த்து அந்தப் பகுதியில் சலசலப்பு ஏற் பட்டு (22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

உ

சிவமயம்

திரு. திருமதி பாலச்சந்திரன்
தம்பதிகளின் புதல்வியும்
குரு சதங்கை நர்த்தகி ஸ்ரீமதி ஜெனனி குமார்
அவர்களின் மாணவியுமான
செல்வி அபிராமி பாலச்சந்திரன்
அவர்களின்
பரதநாட்டிய அரங்கேற்றம்



With the blessings of the Almighty Lord Shiva
together **Mr & Mrs Balachandran & Guru Smt. Jenani Kumar**
humbly request the honour of your presence at the

# *Bharathanatya Arangetram*

of their daughter

## Kumari Abirami Balachandran

Disciple of "Sathankai Marthaki"

## Smt. Jenani Kumar

founder & artistic director of
Shilompoli Shethra Dance Academy,
Toronto, Canada

held on **Saturday, October 1st, 2022**
at the Meadowvale Theatre
**6315 Montevideo Rd, Mississauga,**
**ON L5N 4G7**

Seating at 5:00pm
Arangetram will commence at 5:30PM

Contact Guru: 647-338-7850
Vano: 437-580-9333






ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

## கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



| ஆலயம் திறந்திருக்கும் நேரம் | பூசை நேரம்: |
|---|---|
| காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை | பகல் 12:00 முதல் மாலை 7:30 |
| மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை | உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம் |

## அம்பாள் அடியார்களே!

**புரட்டாதிச் சனி விரத நாட்கள்** 24 செப்டம்பர் 2வது சனி விரத உபயம்:- அருணாசலம் ஸ்ரீதேவி குடும்பம்

**01,08,15 ஒக்டோபர் 2022 சனி விரத நாட்களாகும்.**

26 செப் 2022 திங்கள்கிழமை:- நவராத்திரி விரதம் ஆரம்பம் .கலை நிகழ்ச்சிகள் இரவு 8.00 மணி தொடக்கம் இரவு 8.20 மணி வரை நடைபெறும்.

1ம் நாள் துர்கா பூஜை உபயம்:- நிமலன் சந்திரகுமாரி குடும்பம்.

27 செப் 2022 செவ்வாய்:-2ம் நாள் துர்கா பூஜை உபயம்:
ஸ்ரீகண்ணன் ஜெயகண்ணன் குடும்பம்

28 செப் 2022 புதன்கிழமை:- 3ம் நாள் துர்கா பூஜை உபயம்:
செல்வவடிவேல் ரவிசங்கர், ரவீந்தர்.கேதீஸ் குடும்பங்கள்

29செப்2022 வியாழக்கிழமை:- 4ம் நாள் லஷ்மி பூஜை உபயம்:
புஸ்பராஜா குடும்பம்.

30செப்2022 வெள்ளிக்கிழமை:-5 ம் நாள் லஷ்மி பூஜை உபயம்:
கங்காதரன் தியாகராஜா குடும்பம்

01ஒக் 2022 சனிக்கிழமை:- 6ம் நாள் சரஸ்வதி பூஜை உபயம்:
சதாசிவம் உதயமலர் குடும்பம்

02ஒக் 2022 ஞாயிற்றுக்கிழமை
7ம் நாள் சரஸ்வதி பூஜை உபயம்:
உமையவன் குடும்பம்

03ஒக் 2022 திங்கள்கிழமை (மகிடாசுர சூரன்போர்)
8ம் நாள் சரஸ்வதி பூஜை உபயம்:
செல்வி சஜினா சாம் குடும்பம்

04ஒக் 2022 செவ்வாய்கிழமை:- ஆயுதபூஜை மானம்பூ
உபயம்: விஸ்வநாதன் பிரபாகரன் குடும்பம்.

04ஒக்டோபர் 2022 கேதாரகௌரி விரதம் ஆரம்பம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

# இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# யாழில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு பஷீர் காக்கா தலைமையில் 7 பேர் கொண்ட குழு நியமனம்



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வினை நடாத்துவதற்கான பொதுக்கட்டமைப்பு முன்னதாக பஷீர் காக்கா தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை பொதுக்கட்ட மைப்பொன்றினை உருவாக்கி அதன் ஊடாக நிகழ்வு ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப கலந்துரை யாடல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் கடந்த 17 செப் 2022 சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற கலந் துரையாடலில் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் , அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் யாழ்ப்பாண மாண வர் ஒன்றிய பிரதிநிதிகள், மூத்த முன்னாள் போராளிகள் மாவீரர்களின் பெற்றோர்கள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட பலரும் தமது கருத்துக்களை முன் வைத்தனர். அரசியல் கலப்பற்ற ஒரு கட்டமைப்பாக இது உருவாக வேண்டும். அரசியல்வாதிகள் தமது அரசியலுக்கு அப்பால் இக் கட்டமைப்பிற்கு ஆதரவாக செயற்பட வேண்டும் என்பதே பலரின் கோரிக்கையாக இருந்தது.

கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களின் கரு த்து பகிர்வுகளை தொடர்ந்து முதல் கட்டமாக பொது க்கட்டமைப்பினை உருவாக்குவதற்காக மாவீரர்களின் தந்தையும் மூத்த போராளியான பஷீர் காக்கா தலை மையில் மூத்த போராளிகள் , பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதி உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவானது எதிர்வரும் நாட்களில் மத குருமார்கள் அரசியல் கட்சி தலைவர்கள் , நாடாளு மன்ற உறுப்பினர்கள் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்களின் சங்கங்கள் பொது அமைப்புக்கள் என அனைத்து தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம் அதன் நோக்கம் , எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகள் என்பன தொடர்பில் எடுத்துக்கூறி அவர் களையும் ஒன்றிணைத்து முழுமையான பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வார்கள் என கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

# தேசியத் தலைவரின் வீட்டையும் காணியையும்
## பராமரிக்க முடியாத வல்வை நகரசபை சிவப்பு எச்சரிக்கை!




யாழ்.வல்வெட்டித்துறையில் உள்ள தமிழீழ விடுதலை புலிகளின் தலைவரின் வீட்டு காணிக்கு வல்வெட்டித் துறை நகரசபையினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப் பட்டிருக்கின்றது. காணியில் இருந்த வீடு முற்றாக அடித்து அழிக்கப்பட்ட நிலையில் காணி பராமரிப் பின்றி கைவிடப்பட்டுள்ளமையால் அப்பகுதியில் பற்றைகள் வளர்ந்துள்ளன.

பற்றைகளினால் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் உள்ளது என சுட்டிக்காட்டி, குறித்த காணியினை துப்புரவு செய்து 22ம் திகதிக்கு முன் தமக்கு அறியத் தர வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் குறித்த ஆவணம் தங்களால் கையேற்கப்படும் எனவும் வல்வெட்டித்துறை நகரசபை சிவப்பு எச்சரிக்கை யினை காட்சிப்படுத்தியுள்ளது.

இது குறித்து வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் இராமச்சந்திரன் சுரேன் ஊடகங்களுக்கு தெரிவிக்கை யில் பிரதேச மக்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டு க்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உடனடியாக துப்புரவு செய்ய முயற்சித்தால் காவல் துறை, இராணுவம் என பிரச்சினைகள் வரும் என்பதால் சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் நகரசபை தொடர்ச்சியாக அந்த வளாகத்தை துப்புரவு செய்யும் எவரேனும் அதற்கு உரிமை கோரினால் பராமரிப்பு செலவுடன் மீள வழங்கப்படும் என்றார். இந்த காணி நீண்டகாலமாக துப்புரவு செய்யப்பட வில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

இது குறித்து எம்.கே.சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்கு கருத்து தொிவிக்கையில், வல்வெட்டித்துறையில் எத்தனை இடங்களில் கடுகளாக பற்றைகள் வளர்ந்து ள்ளது. அனைத்துக்கும் சிவப்பு எச்சரிக்கை ஒட்டியுள் ளார்களா? அந்த காணியை நானே பொறுப்பேற்று துப்புரவு செய்வேன் என்றார்.

# தமிழரசுக் கட்சியின் தீர்மானம் அரங்கேறுமா?

கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ்மக்களின் பிரதான அரசியல் தலைமையாக நீடித்து. வருகின்றது. ஆனால், இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்குமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது.

குறிப்பாக, இரா. சம்பந்தன் அரசியலில் இயங்க முடியாத நிலையிருக்கும் நிலையில், தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவிதமாகவும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இன்னொரு வித மாகவும் செயல்பட்டு வருகின்றனர். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு பங்காளி க்கட்சிகள் விக்னேஸ்வரன் அணியோடு இணைந்து கடிதங்களை அனுப்புகின்றன. தமிழ் அரசு கட்சி தனி யாக செயல்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொள்ளும் தரப்புக்கள் ஓர் அணிக்குள் இருந்த வாறே முற்றிலும் மாறுபட்ட வகையில் செயல்படு கின்றன. உண்மையில் பங்காளிக் கட்சிகள் கூட்ட மைப்பில் இருந்தவாறு தனியான கடிதங்களை அனுப்புவது அதிலும், கடந்த தேர்தலில் கூட்ட மைப்பை எதிர்த்துப் போட்டியிட்டவர்களோடு இணைந்து செயல்படுவதானது அடிப்படையிலேயே முரண்பாடான விடயமாகும்.

இந்த நிலைமையின் உண்மையான காரணம் என்ன? கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பான அச்சத்தி லிருந்தே பங்காளிக் கட்சிகள் தங்களை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் மெதுவாக ஈடுபட முயற்சிக் கின்றன. இதன் காரணமாகவே இவ்வாறான செயல் பாடுகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், பங்காளிக் கட்சிகளுடன் பேசவுள்ளதாக தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இவ்வாறான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எவையுமே நடை முறைக்கு வரவில்லை.

அண்மைக்காலமாக தமிழ் அரசுக் கட்சி தனித்து செல்ல வேண்டும் என்றவாறான அபிப்பிராயங்களை தமிழ் அரசு கட்சியின் முக்கியஸ்தர்கள் முன்வைத்து வருகின்றனர். தனித்து செல்வதால் இலாபமடையக் கூடியவர்களே அவ்வாறான கருத்துக்களை முன் வைக்கின்றனர். ஆனால், தனித்துச் செல்வதால் தங்க ளுக்கு பாதகமான விளைவுகள் ஏற்படலாமென்று எண்ணுபவர்கள் எவ்வாறாயினும் கூட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டுமென்று எண்ணுகின்றனர்.

ஏனெனில், தமிழ் அரசுக் கட்சியின் செல்வாக்கும் கணிசமாக வீழ்சியடைந்திருக்கின்றது. இந்த நிலை யில் தனித்து சென்றால், இப்போது வீட்டுச் சின்னத் துக்கு கிடைத்திருக்கும் பத்து ஆசனங்களை நிச்சயம் பெற முடியாது. இந்த நிலைமையைக் கணிப்பவர்கள் ஏதோவொரு வகையில் பங்காளிக் கட்சிகளையும் இழுத்துக் கொண்டு பயணிக்க வேண்டுமென்றே எண்ணுகின்றனர். .தன் காரணமாக தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் கூட்டமைப்பு தொடர்பில் இரண்டு விதமான கருத்துக்கள் இருக் கின்றன. மாவை சேனாதிராசா மற்றும் அவருக்கு ஆதரவானவர்கள் கூட்டமைப்பைத் தக்க வைக்க வேண்டுமென்றே கருதுகின்றனர். இவ் வாறானதொரு பின்புலத்தில் தான் பங்காளிக் கட்சிகளின் தலைவர் களோடு பேசுவதென்னும் முடிவு எட்டப்பட்டிருக் கின்றது.

இது வெறுமனே பேசுகின்ற விடயம் மட்டுமல்ல. கடந்த இரண்டு தசாப்த கால கூட்டமைப்பின் பயண த்தில், ஒரு தசாப்த காலம் விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குள் இருந்தது. அதன் பின்னரான கடந்த ஒரு தசாப்த காலம் தமிழ் அரசு கட்சியின் ஆளு கைக்குள் இருந்தது. விடுதலைப் புலிகளின் காலம் முற்றிலும் வேறுபட்டது. எனவே, தமிழ் அரசு கட்சி யின் ஆதிக்கத்தின் கீழ் தான் கூட்டமைப்பு தொடர வேண்டுமென்று எண்ணுவது தவறானது. ஒரு கூட்டமைப்புக்கான அரசியல் கட்டமைப்பு மற்றும் அரசியல் ஒழுக்கத்தோடு பயணிக்காது விட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஒரு கூட்டமைப்பாக இனிமேல் பயணிப்பது மிகவும் கடினமாகும். .தனைப் புரிந்து கொண்டு கூட்டமைப்பை ஜனநாயக பண்பு களுள்ள ஓர் அரசியல் கட்டமைப்பாக மாற்றியமை ப்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி சிந்திக்க வேண்டும். பங்காளிக் கட்சிகளோடு பேச வண்டும் என்னும் தீர்மானம் இவ்வாறானதொரு நல்ல நோக்கம் கொண்டதாக இருப்பின் அதனை வரவேற்கலாம்.

ஆனால், தொடர்ந்தும் தமிழ் அரசு கட்சியின் மேலா திக்கத்தின் கீழ் மட்டும் தான் கூட்டமைப்பு இருக்க வேண்டுமென்னும் நோக்கத்தோடு இயங்க முற்பட் டால் இறுதியில் கூட்டமைப்பும் வீழ்ந்து, தமிழ் அரசு கட்சியும் வீழ்ந்து போகும் நிலைமையே ஏற்படும்.

# அதிகாரப் பகிர்வும் இராணுவ மயப்படுத்தலின் முடிவும் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியம் - ஹரி ஆனந்தசங்கரி

அதிகாரப்பகிர்வும் இராணுவமயப்படுத்தலை முடிவிற்கு கொண்டு வருவதும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான விடயங்கள் என கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். தமிழ் கார்டியனுடனான கருத்துப் பகிர்வின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.




இலங்கையின் பெரிதாக்கப்பட்டுள்ள இராணுவம் குறித்து கரிசனை வெளியிட்டு ஜீன் மாதம் சர்வதேச நாணய நிதியத்திற்கு கடிதம் எழுதியதாக தெரிவித்துள்ள அவர் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் இந்த விடயம் இடம் பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இராணுவம் பெரிதாக்கப்பட்டுள்ளதாக காணப்படுகின்றது ரஸ்யாவிற்கு எதிராக போரிட்டுக் கொண்டிருக்கும் உக்ரைன் இராணுவத்தை விட இலங்கை இராணுவம் இரண்டு மடங்கு பெரியது என ஹரிசங்கரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு இது குறித்து எழுதிய பின்னர் தான் வோசிங்டனில் இடம் பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் அதிகாரிகளுடனான சந்திப்பின் போது தெளிவான கொள்கை ஆவணங்களை சந்தித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர் கனடாவின் நிதியமைச்சர் மற்றும் பிரதிபிரதமர் ஆகியோருடனான சந்திப்பின் போதும் இந்த ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கனடா அயர்லாந்து ஆகிய நாடுகளிற்கான சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபையின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டுள்ளதாகவும் ஹரி சங்கரி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சர்வதேச நாணயநிதியத்திற்கும் இடையில் பணியாளர் மட்ட இணக்கப்பாடு ஏற்பட்டதிலிருந்து தனது பேச்சுவார்த்தைகளின் போது இராணுவ மயப்படுத்தல் நாட்டை மீண்டும் நிலையான பொருளாதார பாதைக்கு கொண்டு செல்வது எப்படி என்பது குறித்த கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீண்டும் நிலையான பொருளாதார பாதைக்கு கொண்டு செல்வது என்பது வடக்கு கிழக்கிற்கு முழுமையாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதிலிருந்து உருவாக வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிழக்கு அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது வடக்கு கிழக்கு தனது தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கு சுயாட்சி அவசியம் என குறிப்பிட்டுள்ள ஹரி சங்கரி வடகிழக்கின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளதையும் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு வடக்கு கிழக்கின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.6 வீதமே பங்களிப்பு வழங்குவதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மாறாக மேல் மாகாணம் 30 வீதம் பங்களிப்பு செய்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்குகிழக்கின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச சந்தையை சென்றடைவது அவசியம் வடக்கில் விமான நிலையங்களை திறக்க வேண்டும் கப்பல் போக்குவரத்து மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடு ஆகியன அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தங்கள் பொருளாதார எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு உள்ளூரில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அவசியம் எனவும் ஹரி சங்கரி தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் நகல் வடிவ தீர்மானம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஹரி சங்கரி தற்போது விவாதிக்கப்படும் தீர்மானம் எதிர்வரும் வருடங்களில் பொறுப்புக்கூறப்படுவதை முக்கிய இலக்காக கொண்டதாக காணப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நகல்வடிவ தீர்மானம் தற்போது இன்னமும் ஆராயப்படும் விவாதிக்கப்படும் கட்டத்திலேயே உள்ளது இலங்கையில் இழைக்கப்பட்ட குற்றங்களிற்கு பொறுப்புக் கூறப்படுவதை உறுதி செய்யும் விதத்தில் அது வலுப்படுத்தப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ஆவணத்தில் உள்ள கொள்கைகளிற்கு பரந்துபட்ட ஆதரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**வெள்ளிக்கிழமைகளில்**
**உங்கள் அபிமான**
**ஈழநாடு பத்திரிகையை**
**eelanadu.ca**
**மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்**

**Math & Physics Tutoring**
**(For High School Students)**



**Special Classes for IB, AP & University Students**
**Math: Grade 9-12, Advanced Functions,**
**Calculus & Vectors and Data Management.**
**Physics: Grade 11 & 12**
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

**Instructor: S. Elancheliyan,** B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
**சி.இளஞ்செழியன்**
**Tel: 416-524-0424**

# லண்டனில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் உலகத் தமிழர் பேரவை பிரித்தானிய தமிழர் பேரவை அமைப்புக்களுக்கு அழைப்பு இல்லை

பிரித்தானிய விஜயத்தின் போது புலம் பெயர் அமைப்புகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்த போதிலும் இந்த சந்திப்பிற்கு இரு பிரதான புலம்பெயர் தமிழர் அமைப்புகளிற்கு அழைப்பு விடுக்கவில்லை என தகவல் வெளியாகி யுள்ளது.

பிரித்தானியாவை தளமாக கொண்ட உலக தமிழர் பேரவை பிரித்தானிய தமிழர்பேரவை ஆகியவற்றிற்கு ஜனாதி பதியுடனான சந்திப்பிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியுடனான சந்திப்பிற்கு தனது அமைப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை என பிரித்தானிய தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் வி ரவிக்குமார் மோர்னிங்கிற்கு தெரிவித்து ள்ளார்.

அதேவேளை தமிழ்மக்களிற்கான அரசி யல் தீர்வொன்று சாத்தியமாகும் வரை இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி யொருவரை சந்திக்கும் நோக்கம் தனது அமைப்பிற்கு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்திற்கு வரும் ஒவ்வொரு தடவையும் இது



இடம் பெறுகின்றது நாங்கள் சந்திப்பிற் கான அழைப்புகளை நிராகரித்திருக் கின்றோம். அர்த்தபூர்வமான அரசியல் தீர்வு காணப்படும் வரை இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய் யும் எவரையும் நாங்கள் சந்திக்க விரும்பவில்லை எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

சர்வதேச மத்தியஸ்தத்தின் மூலம் அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான பொறிமுறையை சர்வதேச சமூகம் உருவாக்கவேண்டும் எனவும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா இந்தியாவின் தலைமையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் கனடாவும் ஈடுபடவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

உள்நாட்டு மோதல் மற்றும் வன்முறை கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் சமத்துவமான பேண்தகு அமைதியை உறுதி செய்வத ற்காகவும் பிராந்தியத்தில் புவிசார் அரசியல் ஸ்திரதன்மையை ஏற்படுத்தி அதனை பேணுவதற்கும் ஏற்றுக் கொள் ளப்பட்ட உடன்படிக்கைகள் நடை முறைப்படுத்துவதை சர்வதேச மத்தி யஸ்த்தர்கள் உறுதி செய்யவேண்டும் எனவும் ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியின் நிகழ்விற்கு தங்களிற்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை என உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன்சுரேந்திரன் தெரிவித்து ள்ளார்.

எங்களிற்கு எந்த அழைப்பும் கிடைக்க வில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தாலும் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களிற்கு தீர்வொன்றை முன் வைத்து அவர்களின் நம்பிக்கையை பெறும் வரை அவரை சந்திப்பதில் அர்த்தமில்லை எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

# இலங்கை விடயத்தில் சீனாவைப் பின் தள்ளிய இந்தியா!

இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடாகஇ சீனாவை பின்தள்ளி இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில்இ 968 மில்லியன் அமெரிக்க டொலரை இந் தியா இலங்கைக்கு கடனாக வழங்கியுள் ளது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளா தார நெருக்கடியை எதிர்கொள்வதற்காக இலங்கைக்கு இந்தியா அதிகளவான கடனை வழங்கியிருந்ததுடன் மனிதாபி மான உதவிகளையும் வழங்கியிருந்தது.

கடந்த 2017ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சீனா இருதரப்பு கடன் உதவியாக 947 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை வழங்கி முதன்மை வகித்திருந்தது.

அதில் 809 மில்லிய் அமெரிக்க டொலர் சீனா அபிவிருத்தி வங்கியின் ஊடாக நாணய பறிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப் படையில் பெறப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் முதல் 4 மாதங்களில் இந்தியா 968 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கி இலங்கைக்கான கடன் வழங்கிய நாடு களின் பட்டியலில் சீனாவை பின்தள்ளி யுள்ளது. இது தவிர 4 பில்லியன்



அமெரிக்க டொலர் பெறுமதியான 44 ஆயிரம்டன் யூரிய உரத்தையும் இந்தியா வழங்கியுள்ளது.

இந்தியாவுடனான நெருங்கிய உறவு மற்றும் நல்லெண்ணம் அடிப்படையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடாகஇ சீனாவை பின்தள்ளி இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில்இ 968 மில்லியன் அமெரிக்க டொலரை இந்தியா இலங்கைக்கு கடனாக வழங்கி யுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர 'கொள்வதற்காக இலங்கைக்குஇ இந்தியா அதிகளவான கடனை வழங்கியிருந்ததுடன் மனிதா பிமான உதவிகளையும் வழங்கியிரு ந்தது.

கடந்த 2017ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சீனா இருதரப்பு கடன் உதவியாக 947 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை வழங்கி முதன்மை வகித்திருந்தது.

அதில் 809 மில்லிய் அமெரிக்க டொலர் சீனா அபிவிருத்தி வங்கியின் ஊடாக நாணய பறிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப் படையில் பெறப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் முதல் 4 மாதங்களில் இந்தியா 968 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கி இலங்கைக்கான கடன் வழங்கிய நாடு களின் பட்டியலில் சீனாவை பின்தள்ளி யுள்ளது.

# பதவி ஆசை பிடித்தவன் நானெனில் ஜனாதிபதியாகத் தொடர்ந்திருப்பேன்

அரசியலுக்குள் மீண்டும் பிரவேசிப்பது தொடர்பில் நான் இன்னமும் முடிவு எடுக்கவில்லை. இந்நிலையில், எனக்குப் பிரதமர் பதவி வழங்குவது தொடர்பில் யார் முடிவு எடுத் தது? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.



நான் பதவி ஆசை பிடித்தவன் என்றால் ஜனாதிபதிப் பதவியி லிருந்தே விலகியிருக்க மாட்டேன் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வைப் பிரதமராக நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குழு ஒன்று ஆர்வம் காட்டி வருகின்றது எனவும். குறித்த கட்சியின் பிறிதொரு குழு தினேஷ் குண வர்த்தன தொடர்ந்தும் பிரதமராக இருக்க வேண்டும் என்று கூறி வருகின்றது எனவும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்படி விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

எனக்கு மட்டுமல்ல ராஜபக்ஷ குடும்பத்தில் எவருக்கும் பதவி ஆசை இல்லை. மக்களின் அமோக ஆணையுடன் தான் ராஜபக்ஷக்கள் பதவிக்கு வந்தார்கள். இதனை எதிரணி யினரும், தாங்கள் நினைத்த மாதிரி செய்திகளை வெளியிடும் ஊடகங்களும் புரிந்து கொள்ள வேண்டும். தற்போது பிரதமர் பதவி வகிக்கும் தினேஷ் குணவர்த்தன அந்தப் பதவிக்குரிய முழுத் தகுதிகளையும் கொண்டுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மூத்த அரசியல்வாதிகளுள் அவர் முக்கியமான வர் என்றும் கோட்டாபய மேலும் கூறியுள்ளார்.

## கொலைக்கு நீதியை வழங்கியுள்ள தீர்ப்பாயம்

இலங்கை அரசாங்கம் 13 வருடங்களாக சாதிக்காததை நிரந் தர மக்கள் தீர்ப்பாயம் சாதித்துள்ளது



எனது தந்தையின் படு கொலைக்கு நீதியை பெற்றுத் தந்துள்ளது என படு கொலை செய்யப் பட்ட பத்திரிகை யாளர் லசந்த விக்கி ரமதுங்கவின் மகள் அகிம்சா விக்கிரமதுங்க தெரிவித்து ள்ளார்.

ஹேக்கின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் இலங்கை அரசாங்கம் எனது தந்தையின் படுகொலையில் குற்றவாளி என்பதை கண்டறிந்துள்ளது என டுவிட்டர் பதிவில் அகிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம் 13 வருடங்களாக செய்ய தவறியதை நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் செய்துள்ளது எனது தந்தையின் கொலைக்கு நீதியை வழங்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜெனிவாப் பிரேரணையில் திருத்தங்கள் வராது

போர்க்குற்றங்கள் உள்ளிட்ட கடந்தகால மீறல்களுடன் தொடர்புடையவர்கள் உரியவாறு தண்டிக்கப்படாமையும், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதுமே தற்போதைய நெருக்கடிகள் தீவிரமடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பதாக அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை மிக முக்கியமானதாகும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அதேவேளை இப்புதிய பிரேரணையில் மிகவும் இறுக்கமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இப் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படக் கூடுமென பிரிட்டன் உள்ளிட்ட இணையனுசரணை நாடுகள் கரிசனை கொண்டிருப்பதால், பெருமளவிற்குத் திருத்தங்கள் எவையுமின்றி 51 ஆவது கூட்டத்தொடரின் இறுதிவாரத்தில் (அக்டோபர் மாதம் முதலாவது வாரம்) இலங்கை தொடர்பான இப்பிரேரணை நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில், அன்றைய தினமே இலங்கை தொடர்பான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கை மீதான விவாதமும் இடம் பெற்றிருந்தது. அதனையடுத்து இரு தினங்களில் இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் தயாரித்திருக்கும் புதிய பிரேரணை வரைபு வெளியாகியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் திடீர் ஜெனிவா விஜயம் பல்வேறு கேள்விகளைத் தோற்றுவித்திருந்த நிலையில், அது குறித்துத் தெளிவுபடுத்துமாறு வினவிய போதே அவர் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் பகிர்ந்து கொண்டார்.

இலங்கை தொடர்பில் புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டிக் கொள்ளும் நோக்கில் அமெரிக்கப் பிரதிநிதிகளால் கடந்த வியாழக்கிழமை ஜெனிவாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பொன்றில் கலந்து கொண்டு பேசுவதற்கு சுமந்திரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அதனையேற்று ஜெனிவா பயணமான அவர் மறுநாள் பிரேரணை குறித்து உறுப்புநாடுகளுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை கட்டடத் தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலும் கலந்து கொண்டிருந்தார்.

மேற்படி தெளிவுபடுத்தல் கலந்துரையாடலின் போது சீனா, பாகிஸ்தான், கியுபா, வெனிசூலா உள்ளிட்ட பல நாடுகள் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி இலங்கைக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளன. இருப்பினும் அவற்றில் பல நாடுகள் வாக்களிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறாத நாடுகள் என்பதால், இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் கொண்டு வரப்படும் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று சுமந்திரன் நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை இலங்கைக்கு ஏற்கனவே 13 வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான முதலாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இலங்கை வசம் இருந்ததாகவும், இருப்பினும் அதில் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகளைக் கூட இலங்கை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் சுட்டிக் காட்டிய கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், எனவே இலங்கைக்கு மேலும் கால அவகாசத்தை வழங்குவதில் அர்த்தமில்லை என்றும் எடுத்துரைத்துள்ளார்.

அதே போன்று இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய பிரேரணை ஸ்திரமானதாக இல்லையென்றும், எனவே அதனை மேலும் பலப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இருப்பினும் அண்மைக் காலங்களில் தொடரும் அடக்குமுறைகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மீள்பிரயோகம், பொருளாதாரக் குற்றங்கள் உள்ளிட்ட சில புதிய விடயங்கள் அப்பிரேரணையில் உள்வாங்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், போர்க்குற்றங்கள் உள்ளிட்ட கடந்தகால மீறல்களுடன் தொடர்புடையவர்கள் உரியவாறு தண்டிக்கப்படாமையும், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதுமே தற்போதைய நெருக்கடிகள் தீவிரமடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது என்றும் அப்பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளமை ஓரளவிற்கு வலுச் சேர்க்கும் வகையில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை இப்புதிய பிரேரணையில் மிகவும் இறுக்கமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், சிக்கல்கள் ஏற்படக்கூடுமென பிரிட்டன் உள்ளிட்ட இணையனுசரணை நாடுகள் கரிசனை கொண்டிருப்பதால் பெருமளவிற்குத் திருத்தங்கள் எவையுமின்றி 51 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான இப்பிரேரணை நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# நீதிமன்றக் கட்டளைகளையும் மீறி தொடரும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாட்டிற்காக
– பார்த்தீபன் –

நாட்டின் பாரிய பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை, ஜெனிவாவில் சர்வதேசப் பிரச்சினை என மூன்று முனைகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையிலும், குருந்தூர் மலையையும், திருகோணமலையையும் முழுமையாக சிங்கள மயமாக்கி வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் நிலப் பரப்புத் தொடர்ச்சியைத் துண்டிப்பதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

தொல்பொருள் திணைக்களமும், பௌத்த மகாச ங்கங்களும் தான் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் காட்டிக் கொண்டாலும் கூட அரசாங்கத்தின் ஆசீர்வாதம் இல்லாமல் அவர்கள் களத்தில் இறங்கியிருக்க மாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்!

அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் இவை தான் இப்போது பிரதானமானதாக உள்ளது. நீதிமன்ற உத்தரவையும் மீறி இதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பதில் அரசாங்கம் தீவிரமாக இருப்பதை குருந்தூர்மலைப் பகுதியில் தொடர்ச்சியாக இடம் பெறும் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன. நீதிமன்ற உத்தரவையும், தொல்பொருள் திணைக்களத்துக்குள்ள அதிகாரத்தையும் மீறி சட்டவிரோதமான முறையில் பௌத்த கோவிலை அமைத்த பிக்குகளும் அதிகாரிகளும், சுதந்திரமான இருக்க, அதற்கு போராட்டத்தை சாத்வீகமான முறையில் முன்னெடுத்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கைது செய்யப் பட்டிருக்கின்றார்கள்.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை முன்னெடுப்பதற்குக் கூட நிதி இல்லாதிருக்கும் நிலையில் முல்லைத்தீவு குருந்தூர்மலையிலும், திருகோணேஸ்வரம் பகுதியிலும் பாரிய கட்டுமாணப் பணிகளை முன்னெடுக்க பௌத்த பிக்குகளும், அவர்களுக்குப் பின்னணியிலிருந்து செயற்படும் அதிகாரிகளும் தயாராகியிருக்கின்றார்கள். இதற்கு தொல்பொருள் திணைக்களம் தனது வரம்பை மீறி அநுசரணை வழங்கும் அதேவேளையில் அரசாங்கமும் சத்தமில்லாமல் தமது ஆதரவை வழங்கி வருகின்றது. அரசாங்கத்தின் மறைமுக ஆதரவு இல்லாமல் இவற்றை செய்ய முடியாது என்பது அனைவருக்கும் தெரியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குருந்தூர்மலை, தண்ணிமுறிப்பு, குமுழமுனை கிராமங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 632 ஏக்கர் காணியை தொல்பொருள் திணைக்களம் சுவீகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் மக்களுடைய எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே இதற்கான நடவடிக்கைகள் தொல்பொருள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டது. அதேவேளையில், நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் பௌத்த கட்டுமானங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இங்கிருந்த ஆதி சிவன் கோவில் அழிக்கப்பட்டே இந்த கட்டுமானப் பணியை தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் பௌத்த பிக்குகள் முன்னெடுத்து வருகின்றார்கள்.

### தொல்பொருள் சட்டம் சொல்வது என்ன?

குருந்தூமலைப் பகுதியில் பௌத்த சின்னங்கள் காணப்பட்டன எனக் கூறப்பட்டே இங்கு பௌத்த ஆலயம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் பௌத்த பிக்குகளால் முன்னெடுக்கப்பட்டது.



இதற்கு தொல்பொருள் திணைக்களமும் முழுஅளவிலான ஆதரவை வழங்கி வருகின்றது. இதற்காக இந்த மலை உச்சியில் காணப்பட்ட ஆதி சிவன் கோவில் அழிக்கப்பட்டது. அங்கிருந்த சிவன் ஆலயத்தின் சின்னங்கள் காணாமல் போயிருந்தன. பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கித் தவிக்கும் நிலையில், தென்பகுதியிலிருந்து சொகுசு பஸ்களில் வந்த பிக்குளே இவற்றை மேற்கொண்டார்கள்.

தொல்பொருள் சட்டத்தின்படி இவ்வாறு செய்ய முடியுமா என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் பரமு புஷ்பரெத்தினத்திடம் கேட்டபோது இதற்கு அவர் விரிவாக விளக்கமளித்தார் அவரது கருத்து இதுதான் –

பாரிய பொருளாதார நெருக்கடி ஒன்றுக்குள் நாடு இருக்கும் நிலையில் இவ்வாறான ஒரு பௌத்த ஆலயத்தை மீளுருவாக்கம் செய்து புத்தர் சிலையை வைத்து வழிபட முற்படுவது சரியானது தானா என்ற கேள்வி வருகின்ற போது பாரிய பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி பொருளாதார செழிப்புள்ள காலமாக இருந்தாலும் சரி பௌத்த – சிங்கள மக்கள் வசிக்காத ஒரு இடத்தில் பௌத்தம் சார்ந்த ஒரு அழிபாடுகள் கண்டு பிடிக்கப்படுமானால் அவற்றை மீளக்கட்டி வழிபாட்டுக்குரியதாக அமைப்பதை ஏற்பதாக தொல்லியல் சட்டம் கூறவில்லை.

அநுராதபுரத்தில் 20க்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களின் அழிபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் சைவ ஆலயங்கள், திராவிட கலை மரபில் கட்டப்பட்டவை. அந்த ஆலயங்களின் அழிபாடுகள் தேசிய மரபுரிமைச் சின்னங்களாகக் கருத்திற் கொண்டு பார்க்கப்பட்டதே தவிர, அவை மீள அமைக்கப்பட்டு வழிபாட்டுக்குரிய ஆலயங்களாக அமைக்கப்படவில்லை. அவற்றில் ஒரு காளி கோவிலைத் தவிர ஏனையவை எங்கிருந்தன என்பது கூட அடையாளங் காண முடியாதளவுக்கு அதனுடைய நிலைமை காணப்படுகின்றது.

எனவே குருந்தூரில் பௌத்த எச்சங்கள் காணப்படுமானால் அவற்றை கண்டறிந்து ஆய்வு செய்து பாதுகாத்து ஒரு மரபுரிமைச் சின்னமாகக் கொள்ள வேண்டுமே தவிர, முன்னொரு காலத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான ஒரு சின்னமாகக் கருத்திற் கொண்டு அதனை மீளக்கட்டி ஒரு ஆலயமாக மாற்றுவது தொல்லியல் நடைமுறையின் சட்டங்களுக்கு முரணானதாகவே பார்க்கப்பட வேண்டும் இவ்வாறு சொல்கின்றார் பேராசிரியர் புஷ்பரெத்தினம்.

### தொல்லியல் திணைக்கள நடைமுறைகள் என்ன?

நீதிமன்ற உத்தரவின்படி இங்கு பௌத்த கோவில் ஒன்றை அமைக்க முடியாது. தமிழர் தரப்பில் தொடுக்கப்பட்ட வழக்கின்படி இங்கு எந்தவிதமான கட்டுமானங்களையும் செய்யக்கூடாது என முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இலங்கையில் பல இடங்களில் பண்பாட்டுச் சின்னங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பௌத்த மதம் சார்ந்தவை. அதனால், அந்த இடங்களில் எல்லாம் பௌத்த ஆலயங்களை அமைத்தால் இலங்கை முழுவதும் சிங்கள மக்கள் வாழ்ந்ததன் அடையாளமாகத் தான் அது பார்க்கப்படும். ஆனால், தொல்லியல் திணைக்கள வழமையின்படி பௌத்த அல்லது இந்து மதம் சார்ந்த ஆதாரங்கள் காணப்படும் போது அதனை தேசிய மரபுரிமையாகக் கருத்திற் கொண்டு அவற்றை மரபுரிமைச் சின்னமாகப் பிரகடனம் செய்வது அல்லது அந்த சின்னங்களை இருக்கின்ற நிலையிலேயே பாதுகாப்பது என்பது தான் நடைமுறை.

பொலநறுவையில் 12க்கும் அதிகமான சைவ ஆலயங்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. ஆனால், அவற்றில் எதனையுமே பழைய நிலைக்கு மறுசீரமைத்து வழிபாட்டுக்குரியதாக மாற்றவில்லை. பெரும்பாலும் அழிபடைந்தமையாலும், வழிபாட்டுக்குரிய ஆலயமாக இருந்தமையாலும் தமிழ் மக்கள் அதனை வழிபட்டு வருவதாலும் தொல்லியல் திணைக்களம் அதற்குத் தடையாக இருக்கவில்லை.

அதேபோலத் தான் குருந்தூரில் பௌத்த சின்னங்கள் சிங்கள மக்களுக்குரியதா, தமிழ் மக்களுக்குரியதா என்பது விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம். அது யாருக்குரியதாக இருந்தாலும் அந்த ஆலயத்தை மீளக் கட்டி ஒரு கோபுரம் அமைத்து ஒரு முழுமையான பௌத்த ஆலயமாக மாற்றுவது நீதிமன்றக் கட்டளைக்கு முரணானது. தொல்பொருள் திணைக் களம் பின்பற்றி வருகின்ற நடைமுறைகளுக்கும் முரணானதாகத் தான் அது உள்ளது.

### அரசாங்கத்தின் திட்டம் என்ன?

தொல்லியல் திணைக்கம் இவ்வாறு தான் நடந்து கொள்ள வேண்டும் என்பது தொல்லியல் சட்டங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதனை விட நீதிமன்ற உத்தரவு ஒன்றும் உள்ளது. இவை இவ்வாறிருக்க இதற்கு முரணாக அரசாங்கம் செல்வதற்கு துணிந்தமைக்கு காரணம் என்ன?

இலங்கையின் வரலாற்றில் என்றுமே இல்லாதளவுக்கு ஒரு பொருளாதார சீரழிவு உருவாகியுள்ளது. ஒட்டுமொத்த இலங்கை மக்களையும் பாதிக்கின்ற ஒன்றகவே இந்த பொருளாதார வீழ்ச்சி காணப்படுகின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக தென்னிலங்கை மக்கள் போராடிய அளவிற்கு இது வரை தமிழ் மக்கள் போராட முன்வரவில்லை என்ற ஒரு கருத்து உள்ளது.

இந்தப் பொருளாதார நெருக்கடி ஒரு மாதத்திலோ அல்லது ஒரு வருடத்திலோ முடிவுக்கு வரும் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலையில் தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக எழுகின்ற இந்தப் போராட்டங்களில் இன, மத, மொழி வேறுபாடுகளைக் களைந்த நிலையில் இந்த நாட்டிலுள்ள அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய ஒரு நிலை நிச்சயமாக உருவாகும். அவ்வாறான போராட்டங்களை மழுங்கடிப்பதற்கு குருந்தூர்மலை பௌத்த விகாரையை மீளக்கட்டும் செயற்பாடு இருக்கலாம் என விமர்சகர்கள் சிலர் குறிப்பிடுகின்றார்கள்.

நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து போனாலும் பௌத்த மதத்துக்கு நாம் என்றும் துணையான முன்னுரிமை கொடுப்போம் என்ற ஒரு செய்தியை தீவிர சிங்கள – பௌத்த மக்களுக்குச் சொல்வதற்காகவும் இந்த முயற்சி அமைந்திருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

### பௌத்த சின்னங்கள்

இந்தப் பகுதியில் பௌத்த சின்னங்கள் சில காணப்பட்டதாகத் தெரிவித்தே இதனை ஒரு பௌத்த – சிங்கள மயப் படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குருந்தலூர் மலைக்கு அண்மையிலுள்ள கோவில் ஒன்றின் அத்தி பாரத்திலிருந்து சமீபத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று தமிழர்கள் பொறித்த கல்வெட்டாக காணப்பட்டது. தமிழர்கள் பௌத்தத்துக்கு செய்த தொண்டு குறித்தாகவே இந்தக் கல்வெட்டுக்கள் இருந்தன. ஆகவே இந்த குறுந்தலூர் தொடர்பில் ஆழமாக ஆராயும் பொழுது அது தமிழர்களுக்கு உரியதா அவ்வது சிங்கள மக்களுக்குரியதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

எப்படியிருந்தாலும் இங்கு காணப்படும் பௌத்த எச்சங்கள் தேசிய மரபுரிமை அடையாளம். அதனை மரபுரிமை அடையாளமாகவே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமே தவிர நடைமுறைக்கு முரணாக இதனை ஒரு வழிபாட்டு ஆலயமாக மாற்ற முற்படுவது ஆகவே இருக்கும். குறிப்பிட்ட பகுதியில் ஆதிகாலத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்கள் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. வெறுமனே பௌத்த சின்னங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பகுதியை சிங்களப் பகுதியாக மாற்றியமைக்கும் முயற்சிகள் சட்டவிரோதமானது மட்டுமன்றி, இனமுரண்பாட்டை மேலும் தீவிரப்படுத்தக் கூடியது ஒன்று!

### ரவிகரன், மயூரன் கைது

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையில் நில அபகரிப்பிற்கு எதிரான போராட்டத்தை ஏற்பாடு செய்த மயூரன் மற்றும் வடமாகாண முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன் ஆகியோர் புதன்கிழமை இரவு பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

குருந்தூர் மலைப் பகுதியில் 619 ஏக்கர் நிலத்தை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயலும் செயல்பாட்டிற்கு எதிராக புதன்கிழமை ஓர் கவன ஈர்ப்பு போராட்டம். இடம் பெற்றது. இந்த போராட்டங்களை ஏற்பாடு செய்தவர்களே பொலிசாரால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு பொலீஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். தொல்லியல் திணைக்களத்தின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக குற்றம் சாட்டப் பட்டே இவர்கள் கைது செய்யப்பட்டு ள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன..

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 செப்டம்பர் 2022 முதல் 23 செப்டம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லத்துரை பூவின்பராணி

திருகோணமலையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 23 செப்டம்பர் 2022 வெள்ளிக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி செல்லத்துஐர பூவின்பராணி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய உபயம்



### திரு சிவகுமாரன் சிவசுப்பிரமணியம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவசுப்பிரமணியம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 25 செப்டம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவசுப்பிரமணியம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 6ம் மாத நினைவஞ்சலி



### திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த மகேஸ்வரி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களது 6ம் மாத நினைவு நாள் 15 செப்டம்பர் 2022 வியாழக் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ராஜீவ் பொன்னம்பலம்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ராஜீவ் பொன்னம்பலம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2021 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ராஜீவ் பொன்னம்பலம் அவர்களது ஆத்மா சாந்தியப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பாலசிங்கம் விசுவலிங்கம்

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலசிங்கம் விசுவலிங்கம் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பாலசிங்கம் விசுவலிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது,22வது ஆண்டு நினைவஞ்சலி


### திரு செல்லர் மார்க்கண்டு



### திருமதி மனோன்மணி மார்க்கண்டு

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளையும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 செப் 2022 செவ்வாய்க்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். அமரர் திரு செல்லர் மார்க்கண்டு, திருமதி மனோன்மணி மார்க்கண்டு இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



15 செப்டம்பர் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த மகேஸ்வரி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களது 6ம் மாத நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




17 செப்டம்பர் 2022 சனிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




18 செப்டம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சரோஜினிதேவி சுப்பிரமணியம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி சரோஜினிதேவி சுப்பிரமணியம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



20 செப்டம்பர் 2022 செவ்வாய்க்கிழமை வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த அமரர் பொன்னையா சிவலிங்கம் அவர்களது ஆத்மசாந்தி வேண்டி அவர் உடன்பிறந்தோர் சார்பில் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கப்பட்டது



20 செப்டம்பர் 2022 செவ்வாய்க்கிழமை வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த அமரர் பொன்னையா சிவலிங்கம் அவர்களது ஆத்மசாந்தி வேண்டி அவர் உடன்பிறந்தோர் சார்பில் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கப்பட்டது



21 செப்டம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நித்தியானந்தராஜா ஜெயந்தினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிதர்சனின் 30வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிதர்சன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



22 செப்டம்பர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் சமூக சேவையாளரும் வர்த்தகப் பிரமுகருமான திரு சங்கர் நல்லதம்பி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




23 செப்டம்பர் 2022 வெள்ளிக்கிழமை திருகோணமலையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 செப்டம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சாரங்கன் நிவேதா அவர்களது 29வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சாரங்கன் நிவேதா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து





## திரு சங்கர் நல்லதம்பி

22 செப்டம்பர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் சமூகசேவையாளரும் வர்த்தகப் பிரமுகருமான திரு சங்கர் நல்லதம்பி அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் தனது இல்லத்தில் மிக எளிமையாக குடும்பத்தினருடன் பிறந்த நன்நாளைக் கொண்டாடிய திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் அன்றையதினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் சுமார் 150,000.00 ரூபா பெறுமதியான புத்தாடைகளும் வழங்கி மகிழ்ந்தார். பிறந்த நன்நாள் காணும் திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தும் அவரது உறவுகளுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து





## திரு சோம.சச்சிதானந்தன்

கனடாவில் வசிக்கும் சமயத் தொண்டரும் இன நல ஆர்வலரும் சமூகத் தொண்டரும் முன்னாள் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முக்கிய உறுப்பினரும் ஈழநாடு பத்திரிகையின் நல் நோக்கங்களுக்கு உறுதுணையாகவும் பக்கத் துணையாகவும் நின்று பணியாற்றும் திரு சோம.சச்சி அவர்கள் 22 செப்டம்பர் 2022 வியாழக்கிழமை தனது பிறந்த நன்நாளை தனது இல்லத்தில் குடும்பத்தினருடன் அமைதியாகக் கொண்டாடினார். சச்சி அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது குடும்பத்தினர், உறவுகள், நண்பர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும்
குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5%
2%
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
FUNERAL ARRANGEMENTS
OF YOUR LOVED ONES
S. Christeen
416-258-6759

Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
RE/MAX COMMUNITY
RE MAX Community Realty Inc. Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services

UTHAYAS
SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

N.K.S
DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies
• Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

MORTGAGE LOAN
J.R.B
UNIVERSAL INC.
ALMOST ALL SERVICES AVAILABLE
Business Loan
Business (Visa MC)
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும் சிறப்புற வாழ்த்துகின்றோம்
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport



முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
திருமதி நவநாதன் துஷி
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரி
இன்னிசை மாலையும் இரா
அரவிந்தனின்
Mega Tuners
இசையில்
சுப்பர் சிங்கர் புகழ் புண்யா,
ஹரிகரசுதன்
மற்றும் கனேடிய தமிழ்ப் பாடகர்கள்
இணைந்து வழங்கும்
தி
ஹரி
இன்
OCTOBER
23 2022
SUN @ 6:00PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST, SCARBOR
(FINCH & KENNEDY)



GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
RBC Royal Bank Desjardins Manulife Foresters



தொடர்பு
ஈழநாடு பரமேஸ்
தயவு செய்து நுழைவுச்சீட்டு
நிகழ்வுகள் சரியாக மாலை 6
தங்கள் ஆதரவ



CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough
309-80 Corporate Dr
Scarborough, ON
M1H3G5
Mississauga Branch
45-2355 Derry Road
Mississauga, ON
L5S1V6
Tel: 416.439.0224
Fax: 416.439.0226

Tekon
Banquet solutions & Catering
Neela Nadarajan
Event planner
Wedding Reception Engagements
Birthday Parties Puberty Ceremony
Bharathanatya Arangetram Any other Occasions
416.844.3018
416.995.2059

JESEETHA JEGANATHAN
Broker
Cell: 416 566 0337
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
www.jeseehomes.com
Century 21
People's Choice Realty Inc. Brokerage
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN, BA
Sales Representative
Direct: (647) 963-2677
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
JEYSURESH JEGANATHAN
Sales Representative
Direct: (416) 616-4046
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
வீடு வாங்க விற்க, அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கு...

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
...பந்தி நினைவரங்கத்தில்
...ரிகை 10வது ஆண்டாக நடாத்தும்
...ப்போசன விருந்தும் 2022
சுப்பர் சிங்கர் புகழ்
புண்யா
...திரைப்பட பாடகர்
...ிஹரசுதன்
...னிசை மாலை
அன்பளிப்பு:
...ROUGH VVIP: $200, VIP: $100
https://eelanadu.ca/dinner-and-music/
...களுக்கு:
... - 416.841.9600
...டன் மண்டபத்திற்கு வரவும்.
...:00 மணிக்கு ஆரம்பமாகும்.
...ுக்கு நன்றிகள்

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
ஈசன் கிருஷ்ணா
905-886-7399
SunLife Insurance

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
Life Insurance
Critical Illness
Disability
RESP
RRSP
Mortgage Protection Insurance
Travel Insurance
Foresters
Industrial Alliance
Assumption Life

VASANTHAM SUPERMARKET
SRI LANKAN, INDIAN & MULTINATIONAL GROCERIES
மனங்களையும் மனைகளையும் வசந்தமாக்கும்
வசந்தம் சுப்பர்மார்கெட்
இலங்கை, இந்திய மற்றும் பன்னாட்டு மளிகை பொருட்கள்
2900 Markham Road, Scarborough,
ON M1X 0C8
416 292 8585

WEXFORD
WELLNESS CARE INC
MASSAGE THERAPY
PHYSIOTHERAPY
ORTHOPAEDIC
ACUPUNCTURE
CHIROPRACTIC
ORTHOTICS
301-240 Alton Towers Circle,
Toronto ON M1V 3Z3
647-349-5120
647-349-5121
wexfordclinic@gmail.com

KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
Singapore Jewellery
Finest Quality 22K Gold
Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

Proudly Canadian Since 1985
Jyothi
அன்றும் இன்றும் என்றும்..
Experience the Taste
ஜோதி தயாரிப்புக்களை கேட்டு வாங்குங்கள்
416.477.5345
www.jyothifoods.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்!

10,000+



இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 25 வயது [illegible], Bachelors degree , HR புரியும் மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 27 வயது [illegible], Diploma, Nurse புரியும் மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 30 வயது [illegible], Bachelors degree, Programe office புரியும் மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.


- 647 709 1536
416 477 6854
416 477 2259

Mon to Fri
10AM to 7PM

Sat
1PM to 7PM

- GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com

www.friendsmatrimony.com

# ஜெனிவா கூட்டத் தொடரின் பின்னணியில் காங்கேசன்துறை தொடக்கம்



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

இம்மாதம் 10ஆம் திகதியிலிருந்து சுமந்திரனின் தலைமையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக ஒரு தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஜெனீவா கூட்டத்தொடரின் பின்னணியில் முன்னெடுக்கப்படும் இப்போராட்டத்திற்கு காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரை என்று பெயரிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக யார் போராடினாலும் அதை ஆதரிக்க வேண்டும். எனினும் இப்போராட்டம் தொடர்பாக இப்போதுள்ள அரசியற் சூழலின் பின்னணியில் சில கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதது.

கேள்வி ஒன்று, போராட்டத்தின் தலைப்புப் பற்றியது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான ஆர்ப்பாட்டப் பேரணிக்குப் பின் அதே பாணியில் பெயரிடப்பட்ட மூன்றாவது போராட்டம் இது P2P பேரணிக்கு நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து வெவ்வேறு தரப்புகள் உரிமை கோருகின்றன. அதில் சுமந்திரன் சாணக்கியன் போன்றோரும் ஒரு தரப்பு. அந்தப் பெயர் தங்களுக்குரியது என்பதனை காட்டும் விதத்தில் மீண்டும் மீண்டும் சுமந்திரன் தான் ஒழுங்கு செய்யும் போராட்டங்களுக்கு இது போன்ற பெயர்களை வைத்து வருகிறாரா? தமிழக மீனவர்களுக்கு எதிராக அவர் தொடங்கிய போராட்டத்துக்கு முல்லைத்தீவு தொடக்கம்

லாம் என்பதற்கு சிங்களமக்கள் பல முன்னுதாரணங்களை காட்டியிருக்கிறார்கள்.

படைப்புத் திறன் மிக்க அறவழிப் போராட்டம் அது. அந்தப் போராட்டத்தில் அடிப்படையான பலவீனங்கள் உண்டு. தமிழ்மக்களுக்கு அந்தப் போராட்டம் தொடர்பில் கேள்விகள் உண்டு. ஆனாலும் அந்தப் போராட்டத்தில் படைப்புத்திறன் இருந்தது. புதுமை இருந்தது. அதில் பல பிரபல படைப்பாளிகள் பங்கு பற்றினார்கள். புத்திஜீவிகள்,சமூகப் பெரியார்கள், மதப் பெரியார்கள் பங்குபற்றினார்கள். எனவே அது சமூகத்தின் எல்லாத் தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் சக்திமிக்கதாக காணப்பட்டது. கொழும்பில் இராஜ

களை எதிர்த்து,கட்சிகளும் தொழிற் சங்கங்களும் மாணவர் அமைப்பு க்களும் இணைந்து ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டார்கள். இதில் சுமந்திரன் அணியைக் காணவில்லை. ஆயின் காங்கேசன் துறை தொடக்கம் அம்பாந் தோட்டை வரையிலுமான போராட்டத்தை ஒழுங்கு படுத்தியவர்கள் அது தொடர்பாக பொருத்தமான மக்கள் தரிசனங்களைக் கொண்டிருக்கவில்லை என்றே தெரிகிறது? இப்போராட்டம் அரகலயவிடமிருந்து புத்தாக்கத் திறனைக் கற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இப்போராட்டத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒரு



நுழைந்தது குற்றம்' நீச்சல் தடாகத்தில் குளித்தது குற்றம் அவருடைய சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்தது குற்றம்' தன் படம் எடுத்தது குற்றம்' என்று கூறி இருந்தால் குற்றம் நின்றால் குற்றம் உறங்கினால் குற்றம் என்று எல்லாரையும் தூக்கி உள்ளே போடலாம். அது தான் இப்பொழுது நடக்கின்றது. இந்த விடயத்தில் அது சட்ட மறுப்பாக தோன்றிய ஒரு போராட்டம் அதனை சட்டத்தின் தராசில் வைத்து நிறுப்பது சரியா என்ற அடிப்படை கோட்பாட்டுப் பிரச்சினையை சட்டத்தரணிகள் ஏன் எழுப்பவில்லை?

காந்தியின் அறவழிப் போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்துப் நிறுத்தால் காந்தி வாழ்நாள் முழுவதும் சிறையில் தான் இருந்திருக்க வேண்டும். அப்படித் தான் மார்ட்டின் லூதரையோ அல்லது போலந்தில் கொம்யூனிசத்திற்கு எதிராக போராடிய லெட் வலேசாவையோ அல்லது சில மாதங்களுக்கு முன்பு வேளாண் மசோதாவை எதிர்த்துப் போராடிய டெல்லி விவசாயிகளையோ எல்லாச் சட்டங்களின் கீழும் சிறையில் தள்ளமுடியும். எனவே சட்ட மறுப்பை சட்டத் தராசில் வைத்து நிறுக்கலாமா? என்ற அடிப்படையான கோட்பாட்டு விவகாரத்தை முன்வைத்து அரசாங்கத்தோடு வாதாட ஏன் மூத்த வழக்கறிஞர்கள் கூட்டாக முன்வரவில்லை

ண்மையில் ஒரு பெண் ஊடகவியலாளருக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி கூறுகிறார். எல்லாம் சட்டப்படித ான் நடக்கிறது என்று.

ஐந்தாவது கேள்வி, இந்தப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதற்கு முதலில் தமிழரசு கட்சி தனது உறுப்பினர்கள் தொண்டர்கள் மத்தியில் இது தொடர்பான தேவையான விழிப்பூட்டலை செய்திருக்கின்றதா?

இது தொடர்பாக கட்சியின் உயர்மட்டத்தில் கூடி முடிவெடுக்கப்படவில்லை என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகிறார். அது உண்மையா? அதனால் தான் அவர் இப் போராட்டத்தின் தொடக்க நிகழ்வில் பங்கு பற்றவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

அதாவது கட்சிக்குள் தனது முதன்மையைப் பலப்படுத்த முற்படும் ஒரு அணி இப்போராட்டத்தைக் கையிலெடுத்திருக்கிறதா?

எனவே தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெரிகிறது. ஜெனிவா கூட்டத் தொடர் காலம் என்பது தமிழ்அரசியலில் ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனநாயக போராட்டங்களுக்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் ஆகும்.

ஐநாவின் கவனக் குவிப்புக்குள் இலங்கைத்தீவு வரும் ஒரு காலகட்டம் என்பதனால் அக்காலப் பகுதியில் தமிழ்மக்கள் ஒப்பீட்டளவில் அதிகரித்த போராட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். கடந்த 13 ஆண்டு கால தாயக மற்றும் புலம்பெயர் யதார்த்தம் அது தான்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது இப்பொழுது இலங்கைத்தீவின் மூன்று இனத்தவர்களுக்கும் எதிராகத் திரும்பியிருக்கிறது. அதாவது இலங்கைத்தீவின் மூன்று இனத்தவர்கள் மத்தியிலும் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களை ஒரு புள்ளியில் சந்திக்க வைக்கும் விவகாரமாக அது காணப்படுகிறது.

இவ்வாறு மூன்று இனத்தவர்களையும் ஒன்றாக்கக்கூடிய ஒரு போராட்டத்தை மக்கள் மயப்படுத்தவில்லை என்று சொன்னால் உலகசமூகத்துக்கு எப்படிப்பட்ட ஒரு செய்தி போய்ச் சேரும்?

பருத்தித்துறைவரை என்று பெயரிட்டிருந்தார். அதன்பின் இப்பொழுது காங்கேசன் துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரை என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் போராட்டத் தலைப்பின் ஆங்கிலச் சுருக்கத்தை வெள்ளை எழுத்தில் கறுப்பு பட்டியில் பதித்து அப்பட்டியை தங்கள் தலைகளில் அணிந்து போராடுவது. இதுபோன்ற செயல்களின் மூலம் P2P போராட்டத்தின் உரித்து தமக்கே அதிகம் என்று சுமந்திரனும் அவரை சேர்ந்தவர்களும் சொல்ல முற்படுகிறார்களா?

கேள்வி இரண்டு, ஏற்கனவே பயங்கரவாதத் தடைச்ச ட்டத்திற்கு எதிராக கையெழுத்து சேகரிக்கும் ஒரு போராட்டத்தை சுமந்திரன் தலைமை தாங்கி முன்னெடுத்தார். யாழ்.நகரப் பகுதியில் தொடங்கிய அந்தப் போராட்டம் தென்னிலங்கை மாத்தறை வரை சென்றது. தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களும் அதற்கு ஒத்துழைத்தார்கள்.அதில் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களுக்கு என்ன நடந்தது? அவை யாரிடம் கையளிக்கப்பட்டன? அந்தப் போராட்டத்தைப் போலவே இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கும் போராட்டமும் கமுக்கமாக முடிந்து விடுமா?

கேள்வி மூன்று, இந்தப் போராட்டம் தொடங்கிய அன்று கிட்டத் தட்ட 60-க்கும் குறையாத ஆட்களே அதில் பங்கு பற்றினார்கள். அதாவது மக்கள் மயப்படாத ஒரு போராட்டம்.நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக ராவுப் ஹக்கீம் தொழிற்சங்கவாதியான ஸ்ராலின் போன்றோர் பங்கு பற்றிய ஒரு போராட்டத்தின் முதல்நாள் அன்று மிகக்குறைந்த ஆட்களே கலந்து கொண்டமை என்பது எதைக் காட்டுகிறது? அதை ஒரு மக்கள் மயப்பட்ட பெருந்திரள் போராட்டமாக முன்னெடுக்க வேண்டும் என்ற திட்டம் எதுவும் ஏற்பாட்டாளர்களிடம் இருக்கவில்லையா?

இந்த கேள்வியை மேலும் விரித்துச் செல்லலாம். சில மாதங்களுக்கு முன்பு வரை கொழும்பில் காலிமுகத்திடலில் படைப்புத் திறனோடு எப்படிப் போராட

தந்திரிகளின் வதிவிடங்கள் அமைந்திருக்கும் ஒரு பகுதியில் உலகத்தின் கவனத்தையும் ஊடகங்களின் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் அந்தப் போராட்டம் படைப்புத்திறனை வெளிப்படுத்தியது. அப்போராட்டத்தால் அருட்டப்பட்டு மட்டக்களப்பில் காந்தி பூங்காவைச் சூழ்ந்த பகுதிகளில் ஒரு போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்ணியச் செயற் பாட்டாளர்களும் ஏனைய சமூக செயற்பாட்டாளர்களும் இணைந்து நீதிக் கிராமம் என்று ஒன்றை உருவாக்கினார்கள். எனினும் அரகலய வெளிப்படுத்திய படைப்புத் திறனை தமிழ்க்கிராமம் வெளிப்படுத்தவில்லை. அதில் ஒப்பீட்டளவில் படைப்புத்திறன் குறைவாக இருந்தது. அது சமூகத்துக்குள் நொதிக்கத் தவறியது. அதுவும் மக்கள் மயப்படவில்லை.

தமிழ்ப்பரப்பில் ஏற்கனவே அவ்வாறு மக்கள் மயப்படாத போராட்டங்கள் உண்டு. காணாமல் போகச் செய்யப்பட்டோருக்காக உறவினர்கள் நடத்தும் போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம், காணிகளை மீட்பதற்கான போராட்டம் போன்ற பல போராட்டங்கள் ஒப்பீட்டுளவில் மக்கள் மயப்படாதவை தான். அரிதாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை அல்லது எழுததமிழ் போன்ற சில போராட்டங்கள் மக்கள் மயப்படுகின்றன.மற்றும்படி தமிழ்ப்பரப்பில் கடந்த 13ஆண்டுகளில் பெரும்பாலான போராட்டங்கள் மக்கள் மயப்படாதவை தான். போராட்டத்தின் நெருப்பை அணையவிடாமல் பாதுகாத்தோம் என்று கூறித் திருப்திப்படுவதைத் தவிர அதற்குமப்பால் அவை எந்த மக்களுக்கான போராட்டங்களோ அந்த மக்கள்மத்தியில் நொதிப்பை திரட்சியை ஏற்படுத்தவில்லை என்பதே உண்மைநிலை.

இப்படிப்பட்டதோர் அரசியல் பின்னணியில் தான் காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையிலுமான போராட்டமும் அதிகம் மக்கள் மயப்படவில்லை. ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைது நடவடிக்கை

மீம்ஸ் வாய் விட்டு சிரிக்கும் அளவுக்கு படை ப்புத் திறன் மிக்கதாக இருந்தது. அதில் ஒரு பட்டா ரக வாகனத்தில் சுமந்திரன் சாரதியின் ஆசனத்தில் இருக்கிறார். சயந்தன் பின்பெட்டியில் இருந்தபடி எதையோ ஒலிபெருக்கியில் அறிவிக்கின்றார். அது பழைய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான தெரு வியாபாரிகளின் அறிவிப்பு. போராட்டத்தில் இல்லாத படைப்புத்திறன் போராட்டத்திற்கு எதிரான ஒரு மீம்ஸில் இருந்தமை என்பது சுவாரசியமான ஒரு முரண்.

நாலாவது கேள்வி, சுமந்திரன் ஒரு நாடறிந்த வழக்கறிஞர். அரகலயவோடு தொடர்ச்சியாக தனது நெருக்கத்தை காண்பித்து வருபவர். அது சட்ட மறுப்பாக தோன்றிய ஒரு போராட்டம். அந்தப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் வன்முறைகள் வெடித்தன. அந்த வன்முறைகளுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்று ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் அரசாங்கமோ அப் போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கப் பார்க்கின்றது. அதனால் தான் போராட்டத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விடயத்தில் போராட்டத்தின் தொடக்கத்தில் இருந்து அந்தப் போராட்டத்திற்கு ஆசிர்வாதத்தை வழங்கிய சட்டத்தரணிகள் அமைப்பானது ரணில் விக்கிரமசிங்க போராட்டத்தை நசுக்கத் தொடங்கிய பொழுது எதிர்பார்த்த அளவுக்கு எதிர்ப்பை காட்டவில்லை.

அதைவிட முக்கியமான ஒரு விடயம். சட்டமறுப்பாக தோன்றிய ஒரு போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கும் அரசாங்கத்திற்கு அது தொடர்பில் எதிர்ப்பு எதையும் சட்டத்தரணிகள் சங்கம் பெரியளவில் காட்டவில்லை. சட்ட மறுப்பாக எழுச்சி பெற்ற ஒரு போராட்டத்தை சட்டக்கண் கொண்டு பார்த்தால், ஜனாதிபதியின் கதிரையில் அமர்ந்தது குற்றம். ஜனாதிபதியின் கழிப்பறைக்குள்



U StarArt

Get an Exclusive Offer With an Exciting Package!

All In One Place

U Star Art

PRIYA UTHAYAN

(416) 897-5816

647-945-7212


Our Services

- Bridal Makeup
- Bridal Saree Blouse
- Bridesmaid Saree Blouse
- Flower Girls Dress
- Cake Decorating
- Rich Cake



# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104



## MEMBERS ANNUAL GENERAL MEETING 2022

The 27th Annual General Meeting will be held on Saturday October 01, 2022 from 10 am to 1pm.

Time :- 10 am to 1 pm on 01/Oct/2022 Saturday

Place :- Canada Sri Ayyappa Temple

Elections for 4 New Board of Directors for 2022, will be held on Saturday Oct 29th 2022.

Time :- 10 am to 2 pm on 29/Oct/2022 Saturday

Place :- Canada Sri Ayyappan Temple Hall

## முக்கிய அறிவித்தல் :- அங்கத்தவர்களுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் 2022

அன்புடையீர்!

ஸ்ரீ ஐயப்ப சமாஜத்தின் 27வது பொதுக்கூட்டம், ஐப்பசி 01, 2022 சனிக்கிழமை காலை 10.00 தொடக்கம் 1 மணிவரை இடம்பெறும்.

காலம் :- 01/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 1 மணிவரை

இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்

புதிய நான்கு நிர்வாகிகளுக்கான தேர்வு ஐப்பசி 29ம் திகதி சனிக்கிழமை (29/10/2022) காலை 10 மணி தொடக்கம், பகல் 2 மணிவரை இடம் பெறும்.

காலம் :- 29/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 2 மணிவரை

இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்

மேலதிக தொடர்புகளுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

416.321.6104, 416.321.7558

அறங்காவலர் சபையினர்

# பின்னடைவு குறித்த மறுபரிசீலனை இல்லாத மந்தைச் சமூகம்!

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



அரசியல், பொருளாதாரம், பண்பாடு எல்லாவற்றிலும் ஈழத் தமிழர்கள் மிகப் பின்னடைந்து கொண்டே செல்கின்றனர். இது மிக அபாயகரமான ஒரு நிலையாகும். தொடரும் இந்த நிலையானது, எதிர்காலத்தில் மிகப் பெரிய சிக்கல்களையும் நெருக்கடிகளையும் உருவாக்கப் போகிறது. என்பதால் தான் இது மிகப் பெரிய அபாயகரமான நிலை என்று எச்சரிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை எப்படித் தான் நாம் எச்சரிக்கை செய்தாலும் உண்மை நிலவரத்தை எப்படித் தான் எடுத்துச் சொன்னாலும் அதைப் புரிந்து கொள்ளக் கூடிய உள நிலையும் அறி திறனும் தமிழர்களிடம் இல்லை.

ஏனென்றால், இதைப் பலர் ஏற்கனவே முன்னுணர்ந்து செய்திருக்கின்றனர். மாற்றுப் பாதையைக் குறித்து, மாற்று அரசியல் வழிமுறையைக் குறித்துச் சிந்திக்க வேண்டும் என்று அவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றனர். மிகப் பெறுமதியான கருத்துகளையும் மாற்றுத் தெரிவுகளையும் முன்வைத்துள்ளனர். இருந்த போதும் அவை ஒன்றும் கவனத்திற் கொள்ளப் படவில்லை. மதிக்கப்படவில்லை. சரியாகச் சொன்னால் பிடிவாதமாக அந்தக் கருத்துகள் உண்மைகள் நியாயங்கள் மறுக்கப்பட்டுள்ளன் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனால் தொடர்ந்தும் தமிழ்ச் சமூகம் பலவீனப்படுவதே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் கொண்டிருந்த அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கட்டமைப்பு இன்றில்லை. அன்று எந்த ஊரிலும் இராணுவ முகாம்கள் இருந்ததில்லை. இப்போதுள்ளதைப் போல கணவரைப் போரில் அல்லது படை நடவடிக்கையில் இழந்த குடும்பங்களில்லை. கை, கால்களை இழந்த மனிதர்களில்லை. காணாமலாக்கப்பட்டோரைப் பற்றிய கவலைகள் இருக்கவில்லை. உற்றமும் சுற்றமும் திக்கொன்றாகச் சிதறிக் கிடந்ததில்லை. ஊரை வாழ்வை, இளமையை இழந்த அலைந்த வாழ்க்கை இருந்ததில்லை. ஆகவே, அன்றிருந்த நெருக்கடிகளை விடவும் அன்றிருந்த பிரச்சினைகளை விடவும் இன்றைய நெருக்கடிகளும் பிரச்சினைகளும் அதிகம். பாதிப்புகளும் அதிகம்.

சிறிய உதாரணம், அன்று வடக்குக் கிழக்கில் ஐந்து ஆறு இராணுவ முகாம்களே இருந்தன. அதுவும் ஒதுக்குப் புறமாக. ஆனால், ஊருக்கு ஒன்று அல்லது அதற்கும் மேல் என்ற அளவில் வடக்குக் கிழக்கு எங்கும் படை முகாம்கள் விளைந்து போயுள்ளன. இடப் பெயர்வுகள் உண்டாக்கிய சமூகப் பிறழ்வுகள் தொடக்கம் உளவியல், பண்பாட்டுச் சிக்கல்கள் வரை எல்லாவற்றிலும் ஏகப்பட்ட பிரச்சினைகள். இதை விட காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், சிறைப்படுத்தப்பட்ட அரசியலாளர்களின் பிரச்சினை, உடல் உறுப்புகளை இழந்தோர், உறவுகளைப் போரில் பறிகொடுத்தோர் சிரமங்கள் என பல நூறு துயரச் சங்கிலிகள்.

இப்படிப் பல விதமான பிரச்சினைகளால் சூழப்பட்டிருக்கும் போதும் தாம் முன்னெடுக்கின்ற அரசியல், பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் எந்தளவுக்கு தமிழ்ச் சமூகத்தை முன் கொண்டு சென்றது — செல்கிறது என்ற ஆய்வோ, மறுபரிசீலனையோ, மதிப்பீடோ இல்லாமலே மந்தைத் தனமாக இருக்கிறது தமிழ்ச்சமூகம்.

உண்மையில் இது மிகப் பெரிய மந்தைத் தனமே. தாம் ஆதரிக்கின்ற அரசியல் தலைமைகளும் கட்சிகளும் எந்தளவுக்கு நெருக்கடிகளைக் குறைக்கக் கூடிய செயற்றிட்டங்களோடும் சிரத்தையோடும் உள்ளன என்று ஒருத்தர் கூடச் சிந்திப்பதாகக் காணோம். ஏன், இதை நேரடியாகவே கேட்டு விடலாம். தமிழ்த்தேசியக் கட்சிகள் என்ற அடையாளத்தை வலிந்து சூடிக் கொண்டுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த்தேசிய பகமை இயக்கம், தமிழ் மக்கள் தேசியக் கட்சி என்று இருக்கின்ற பல கட்சிகளில் ஏதொன்றாவது ஆக்கபூ ர்வமாக தமிழ் மக்களின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இதுவரையில் பங்களித்துள்ளதா?

அப்படியென்றால் அத்தகையை பங்களிப்பைச் செய்த கட்சி எது? அதனுடைய பங்களிப்பு என்ன? அதன் பெறுபேறு என்ன? என்று யாராவது சொல்ல வேண்டும். அல்லது குறித்த கட்சியினர் இங்கே அவற்றைப் பற்றி தாராளமாக அறிக்கை இடலாம். அப்படி ஏதாவது அதிசயம் நடந்தால் மகிழ்ச்சியே, நன்மையயே!



ஆனால் என்னுடைய அவதானிப்பில் இவை எவையும் எந்தப் பெறுமதிகளையும் தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை. இவற்றின் அரசியல் முன்னெடுப்புகளால் எந்தச் சிறிய நன்மைகளையும் தமிழ்ச் சமூகம் பெற்றுக் கொள்ளவும் இல்லை. அனுபவிக்கவும் இல்லை. பதிலாக மேலும் மேலும் நெருக்கடிகளையே இந்தக் கட்சிகளும் இவற்றின் தலைமைகளும் உண்டாக்கியுள்ளன. அதாவது தமிழ் மக்களைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக இவை மேலும் மேலும் பலவீனப்படுத்தியுள்ளன் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எதிர்மறை அரசியலை சொந்த மக்களுக்கே செய்கின்ற தலைமைகளாகவும் கட்சிகளாகவும் உள்ளன. இதற்குச் சரியான பெயர், இந்தக் கட்சிகளே பிற தரப்புளைப் பார்த்துச் சொல்வதைப்போல "இது படு துரோகமாகும்''. கொடுமை என்னவென்றால் இவை பிற தரப்புகளைப் பார்த்து துரோகத் தரப்புகள் என்கின்றன. காகம் காகத்தைப் பார்த்துக் கறுப்பு என்ற மாதிரித் தான்.

இதில் முக்கியமான பொறுப்பை ஏற்க வேண்டியது தமிழரசு கட்சியாகும். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காலத்திலிருந்தே தமிழரசுக் கட்சி பிரதான கட்சியாக செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கிறது. மக்களும் தமிழரசுக் கட்சிக்குத் தொடர்ச்சியாக தமது ஆதரவையும் பங்களிப்பையும் செய்திருக்கிறார்கள். மக்கள் அதை ஆதரித்த அளவுக்கும் அதற்கு பங்களிப்பைச் செலுத்திய அளவுக்கும் மக்களுக்கு தமிழரசுக் கட்சி எந்த நன்மைகளையும் செய்ததே இல்லை. குறைந்த பட்சம், ஒரு நல்ல அரசியல் நெறிமுறையையோ முன்னேற்றகரமான அரசியல் விளைவுகளையோ கூட உண்டாக்கவில்லை. தேர்தல் மேடைகள் தொடக்கம், பாராளுமன்றம் வரையில் மக்கள் அரங்குகள் எங்குமே பிறரை வசை பாடுவதிலும் ஏமாற்றுக் கதைகளைச் சொல்வதிலுமே அதனுடைய வரலாறு கழிந்திருக்கிறது. வேண்டுமென்றால் சுதந்திரன் பத்திரிகையிலிருந்து இன்றைய தினக்குரல், உதயன், வலம்புரி, ஈழநாடு, காலைக்கதிர் வரையில் ஒரு சிறிய அவதானிப்பைச் செய்தால், காறி உமிழ்வீர்கள். எந்த முன்னேற்றமும் இல்லாமல் 50 ஆண்டுக்கு முன்பு வந்த அதே அறிவிப்புகள், செய்திகள். இந்தச் சமூகம் வளரவேயில்லை. தேய்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

இன்று பிரதேச சபைகள், நகரசபைகளையே சரியான முறையில் இயக்க முடியாத அளவுக்குத் தான் தமிழரசுக் கட்சியின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்) நிலைமை உள்ளது. அதன் தலைமைத்துவம் ஏறக்குறைய செயலற்று விட்டது. (இதைப்பற்றி அடுத்த வாரம் விரிவாகப் பார்க்கலாம்). மாவை சேனாதிராஜா தான் தமிழ் மக்களின் தலைமை என்றால்.... தமிழ் மக்களின் கதியை, கதையைப் பற்றி சொல்லத் தேவையில்லை. இன்றைய உலக ஒழுங்கு, பிராந்திய அரசியல் பொருளாதார நிலைமைகள், உள்நாட்டு அரசியல் சூழல், சமூகங்களுக்கிடையிலான உறவு நிலைகள், மக்களின் உள நிலைப் போக்கு, ஜனநாயக அடிப்படைகள் என எதைப் பற்றிய சிற்றறிவும் இல்லாமல் 1970களின் மனப்பதிவோடு அரசியலைப் பேசிக் கொண்டிருக்கிறார் மாவை. 1970க்குப் பிறகு என்ன நடந்தது என்றே அவருக்குத் தெரியாது. மாவை மட்டுமல்ல, ஏனையவர்களின் நிலையும் ஏறக்குறைய அதே மாதிரித் தான்.

தமிழரசுக் கட்சிக்கு எந்த வகையிலும் குறையாத அளவில்தான் ஏனைய கட்சிகளும் தலைமைகளும் உள்ளன. விடுதலை இயக்கங்களில் இருந்து வந்த தலைவர்களும் முயல் பிடிக்கும் நாயை முகத்தில் தெரியும் என்பார்கள். நம் தமிழ் அரசியல் தலைமைகளைப் பார்த்தாலே தெரியும், அவற்றால் என்ன செய்ய முடியும்? என்று.

ஆக மொத்தத்தில் இங்கே உள்ள துயரமான நிலை என்ன என்றால், இதுவரையில் இந்தத் தலைமைகளும் கட்சிகளும் எத்தகைய நன்மைகளைப் பெற்றுத் தந்துள்ளன? எவ்வளவுக்குப் பாதுகாப்பாக இருந்துள்ளன? என்பதைக் குறித்தும் யாரும் (மக்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள்....) சிந்திக்கவில்லை என்பதேயாகும்.

இதில் மிகக் கவலையளிப்பது இதைக் குறித்து தமிழ்ப் புத்திஜீவிகளும் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினரும் அரசியல் ஆய்வாளப் பெருந்தகைகளும் கேள்வி எழுப்பாமல், சிந்திக்காமல் இருப்பதாகும். மேலும் சொல்வதாக இருந்தால் தமிழ் ஊடகங்கள், ஆய்வாளர்கள், கருத்துருவாக்கிகள் போன்றோரும் இதைப் பற்றிய சிரத்தையோ, சிந்தனையோ இல்லாமல் என்னவோ, ஏதோ என்று இருக்கிறார்கள். பழைய வாய்பாட்டையே திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்பத்திரும்பப் பாடிக் கொண்டிருக்கின்றனர். அல்லது இந்தப் பழைய வாய்பாட்டைக் கையில் எடுத்துக் கொண்டு ஸ்ரீராம ஜெயம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது தேவன் வருவார் என்கிற மாதிரி தீபாவளிக்கு, தைப்பொங்கலுக்கு, ஆடிப்பிறப்புக்கு, சித்திரா பௌர்ணமிக்குத் தீர்வு கிட்டும், மாற்றம் நிகழும், ஐநா வரும், ஜெனிவாத் தீர்மானம் எழும் என்று அல்லேலாயோய பாடுகிறார்கள்.

மக்களின் இத்தகைய மந்தைத் தனமான நிலையானது, மேற்குறித்த தலைமைகளுக்கும் கட்சிகளுக்கும் வாய்ப்பாகி விடுகிறது. இதனால் அவர்கள் தாராளமாகக் கயிறு விடலாம் என்ற நம்பிக்கையில் பழைய புருடாக் கதைகளையே தொடர்ந்தும் விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதற்குக் காரணம், தமிழ் மக்களில் பெரும்பாலானோர் ஒரு விதமான அதீதக் கற்பிதங்களில் வாழ்ந்து பழகியமையாகும். எதையும் கேள்வி கேட்காமல், எத்தகைய விமர்சனங்களையும் எழுப்பாமல் வழிபாட்டு மனநிலையில் கட்டுண்டு கிடப்பதே தமிழ்ச் சமூகத்தின் பண்பாகி விட்டது. போதாக்குறைக்கு எதிரியை முறியடிக்க வேண்டும் என்றால் அரசுக்கு எதிராக நிற்க வேண்டும். அரசைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற விதமாக நடந்து கொள்கிறது. இதற்கு என்ன என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து அதனிடம் தெளிவான விளக்கமில்லை. வெறும் வாய்ச்சவடால்களின் மூலமாக அசாங்கத்தைப் பலவீனப்படுத்தவோ, பணிய வைக்கவோ முடியுமா? என்பதைக் குறித்து அது சிந்திக்கவில்லை.

எதிர்ப்புக் கோஷ அரசியல், மிகப் பெரிய ஆயுதப் போராட்ட அரசியல் ஆகியவற்றின் மூலமாக எதையுமே பெற முடிந்ததில்லை என்பது கடந்த கால அனுபவம் உண்மை. இந்த அரசியல் பெற்றுத் தந்தது, இன்னுமின்னும் நெருக்கடிகளையே.

ஆகவே இனிமேல் தமிழ் மக்கள் முற்றிலும் புதிய முறையிலான அரசியலையே முன்னெடுக்க வேண்டும். புதிய தந்திரோபயமும் உச்சமான அர்ப்பணிப்பும் புதிய சிந்தனையும் ஜனநாயக விரிவும் கொண்ட அரசியலை முன்னெடுக்க வேண்டும். அதாவது இதுவரையிலும் மக்கள் பலவீனப்பட்டனர். தலைமைகளும் கட்சிகளும் வளர்ந்தன. இது தவறானது. இனிமேல், தலைமைகளையும் (22ம் பக்கம் பார்க்க)

சீனாவும் ரஷ்யாவும் தன் பக்கத்தில் இருக்கும் வரை பொறுப்புக்கூறல் குறித்த அழுத்தங்களை பாதுகாப்புச் சபைக்கு நகர்த்த முடியாதென்று கொழும்பின் ஆட்சியாளர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 13 ஆவது திருத்த அமுலாக்கம், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குதல் போன்ற விடயங்களை இந்தியா பலமுறை வலியுறுத்தியிருந்தாலும், இப்போது, தொனியை மாற்றி அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றங்கள் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி அதிருப்தியைப் பதிவு செய்திருக்கிறது.

ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில், இந்தியாவின் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே நிகழ்த்திய உரை, இதற்கு முன்னைய கால கட்டங்களில் இந்தியப் பிரதிநிதிகள் வெளியிட்ட கருத்துக்களில் இருந்து சற்று வேறுபட்டிருந்ததை பலரும் உணர்ந்துள்ளனர். இந்தியத் தரப்பு பொறுப்புக்கூறலை வழக்கம் போலவே இம்முறையும் முக்கியமான விவகாரமாக எடுத்துக் கொள்ளாத போதும், நல்லிணக்கம், நிலையான அரசியல்

வந்த பின்னர் தான், மெதுமெதுவாக இலங்கையில் அதன் பொருளாதார ஆதிக்கம் அதிகரித்தது. போரின் தொடர்ச்சியான விளைவு களைப் பயன்படுத்தி இலங்கைக்குள் ஊடுருவுகின்ற வாய்ப்பை சீனா பயன் படுத்திக் கொள்ள அனுமதிக்க கூடாது என்று





இந்தியா கருதியது. ஆனால் அந்த முயற்சியில் இந்தியாவினால் இன்று வரை வெற்றிபெற முடிய வில்லை. பொறுப்புக்கூறல் அழுத்தங் களையும் கொழும்புக்கு கொடுக்க முடிய வில்லை. சீன ஆதிக்கத்தையும் தடுக்க முடியவில்லை. ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் முன்

வாக நடத்துதல் ஆகிய மூன்று விடயங்களையும் அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வுக்கான முக்கிய விடயங்களாகவும் அவர் முன்மொழிந்திருக்கிறார். போர் முடிவுக்கு வந்த பின்னர், 13ஆவது திருத்த அமுலாக்கம், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குதல் போன்ற விடயங்களை இந்தியா பலமுறை வலியுறுத்தியிருந்தாலும், இப்போது, அதன் தொனியில் மாற்றம் காணப்படுகிறது. அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றங்கள் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி கவலை வெளியிட்டு அதிருப்தி யைப் பதிவு செய்திருக்கிறது. இலங் கைத்

அடைய உதவும் என்றும், இது தொடர்பாக இலங்கை உடனடி மற்றும் நம்பகமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பிரதிநிதி பாண்டே வலியுறுத்தியிருந்தார்.

இந்தியா இந்த முறை அழுத்தங்களை சற்று தீவிரப்படுத்தியுள்ளதான தோற்றத்தை அவரது உரையின் சொல்லாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

இது அண்மைக்காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் காணப்படும் சிக்கல்கள் மற்றும், சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள உறவு என்பவற்றைப் பிரதிபலிப்பதாக இருக்க கூடும்.

சீனாவின் யுவான் வாங் 5 கப்பல் அம்பாந்தோட்டையில் நங்கூரமிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட விவகாரம் இந்தியாவைக் கடும் அதிருப்திக்கு உள்ளாக்கியது. இந்தியாவின் நலன்களை இலங்கை முழுமையாகப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையை அது

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



தகர்த்து விட்டது. இதனை இந்தியா தமக்கான அச்சுறுத்தலாக பார்க்கின்ற போதும், அதற்கெதிராக கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட வில்லை.

பொறுமையாகவே இந்தியா காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது. அவசரப்பட்டால், சீனாவிடம் இலங்கையை இழந்து விட நேரிடும் என்பது இந்தியாவுக்குத் தெரியும்.

அதனால் தான், ஜெனிவாவிலும் கூட இந்தியா இப்போதும் பொறுமையாகவும் நிதானமாகவும் செயற்பட முனைகிறது. சீனாவை மனதில் வைத்தே இந்தியா முடிவுகளை எடுக்கிறதே தவிர, தமிழர்களை அடிப்படையாக வைத்து அல்ல. அதனால், இந்தியா எடுக்கின்ற முடிவுகள் தமிழர் தரப்பை திருப்திப்படுத்தக் கூடியனவாக இல்லாதிருப்பது ஆச்சரியமில்லை.

# மாறுகிறதா இந்தியா?

தீர்வு என்பதற்கு அதிக முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

2012ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான தீர்மானங்கள் கொண்டு வரப்பட்ட சந்தர்ப்பங்களில், ஒரு முறை மாத்திரமே, தி.மு.க. அரசின் அழுத்தங்களால், அப்போது ஆட்சியில் இருந்து காங்கிரஸ் அரசாங்கம், ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தது.

அதற்குப் பின்னர் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் அனைத்திலும் இந்தியா நடுநிலை வகித்து வந்திருக்கிறது. அதாவது பொறுப்புக்கூறல் சார்ந்த அழுத்தங்களைக் கொடுப்பதற்கு இந்தியா எப்போதும் தயாராக இருந்த தில்லை.

போருடன் தொடர்புபட்ட மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை இலங்கைக்குள் முன்னெடுப்பதற்கு மட்டுமே இந்தியா ஆதரவளித்தது.

பொறுப்புக் கூறல் வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றாத போதும், நிறைவேற்றக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்பதை உறுதி செய்த போதும், இந்தியா தனது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.இலங்கையின் இறைமை, சுதந்திரம் ஆகியவற்றின் மீதான தலையீடாக மாத்திரம் இந்தியா அதனை அணுக வில்லை.

பொறுப்புக்கூறலுக்கு அழுத்தங்களைக் கொடுக்கும் வெளியகத் தலையீடுகளை இந்தியா எதிர்த்தமைக்கு இரண்டு முக்கியமான காரணிகள் இருந்தன.

குறிப்பாக இறுதிக் கட்டப் போரின் போது இந்தியாவும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு தரப்பாக இருந்தது. சில விடயங்களில் நேரடியாகவும், பல விடயங்களில் மறைமுகமாகவும் இந்தியா அந்தப் போரில் பங்களித்திருந்தது.

பொறுப்புக்கூறல் என்று வரும் போது, அதில் தனது பெயரும் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதில் இந்தியா கவனமாக இருந்தது.

இரண்டாவதாக, பொறுப்புக்கூறலுக்கான வெளியகத் தலையீடுகளை அனுமதிக்கும் போது அல்லது ஆதரிக்கும் போது இலங்கை தனது பக்கத்தில் இருந்து விலகிச் சென்று விடும் என்ற அச்சமும் புது டில்லிக்கு இருக்கிறது.

போருக்கு ஆதரவளிக்க சீனா முன்

வைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், சீனா வலுவான ஆதரவை வழங்கி வந்திருக்கிறது.

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறை விடயம் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்லப்படாது என்ற உறுதியான நம்பிக்கையை இலங்கைக்கு கொடுத்திருப்பது சீனாவும் ரஷ்யாவும் தான்.

இந்த இரண்டு நாடுகளும் தன் பக்கத்தில் இருக்கும் வரை பொறுப்புக்கூறல் குறித்த அழுத்தங்களை பாதுகாப்புச் சபைக்கு நகர்த்த முடியாதென்று கொழும்பின் ஆட்சியாளர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

சீனா இலங்கையை வலுவாக ஆதரிக்கும் நிலையில், பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் தீர்மானங்களுக்கு இந்தியா ஆதரவு வழங்கினால், அது இலங்கை– சீன நெருக்கத்தை மேலும் அதிகப்படுத்தி விடும் என்ற அச்சம் புது டில்லி கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் உள்ளது.

இது பொறுப்புக்கூறல் விவகாரத்தை இந்தியா தவிர்த்து அல்லது அதிலிருந்து நழுவி வந்துள்ளமைக்கு முக்கிய காரணம். ஆனால் வெளியக பொறுப்புக்கூறல் செயல்முறைகள் இலங்கையின் இறைமை, சுதந்திரத்தின் மீதான தலையீடாக இருக்க கூடாது என்றே இந்தியா வலியுறுத்தி வந்திருக்கிறது.

என்ன தான் இந்தியா, சீனா விடயத்தில் இத்தகைய கணக்குப் போட்டிருந்தாலும், பொறுப்புக்கூறல் அழுத்தங்களையும் கொடுக்க முடியாமல், சீனா ஆதிக்கத்தை தடுக்க முடியாமல் தான் இருந்து கொண்டிருக்கிறது.

இப்போதும் கூட இந்தியப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே தனது உரையில் பொறுப்புக்கூறலை தவிர்த்து விட்டு, நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு போன்ற விடயங்களுக்கு அதிக அழுத்தம் கொடுக்க முற்பட்டிருக்கிறார். அவர் தனது உரையில், இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த தமது அர்ப்பணிப்புகளில் இலங்கை அரசாங்கத்தினால் குறிப்பிடக் கூடிய முன்னேற்றங்கள் இல்லாமை குறித்து இந்தியா கவலை கொள்வதாக குறிப்பிட்டிருக்கிறார். 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல், மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குதல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை விரை

தமிழர்களுக்கு நீதி, அமைதி சமத்துவம் மற்றும் கண்ணியத்தை உறுதி செய்யும் வகையிலான, ஐக்கிய இலங்கை கட்டமைப்பிற்குட் பட்ட அரசியல் தீர்வே இலங்கையில் அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த இந்தியாவின் நிலையான நோக்கம் என்றும் இந்தியப் பிரதிநிதி சுட்டிக்காட்டியிருக்கிறார். விரைவாக தேர்தல்களை நடத்துவதன் மூலம் மாகாண சபைகளை செயற்படுத்துவது, இலங்கையின் அனைத்து பிரஜைகளும் வளமான எதிர்காலத்திற்கான அவர்களின் அபிலாஷைகளை


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஜெனிவா அரசியலைப் புரிந்து கொள்ளுதல்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 1வது கூட்டத் தொடர் இடம் பெற்று வருகின்றது. இலங்கையின் மீதான புதிய பிரேரணயின் ஒரோ வரைபு வெளியாகியிருக்கின்றது. தமிழ் கட்சிகள் வலியுறுத்தியிருந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விவகாரம் வரையில் இடம்பெறவில்லை. . இது தொடர்பில் வழக்கமான ஆதங்கங்களை காண முடிகின்றது. கூடவே ஜெனிவாவை எப்படி கையாண்டிருக்க வேண்டுமென்னும் ஆலோசனைகயையும் காண முடிகின்றது. ஜெனியாவை தெளிவாக புரிந்து கொண்டால் இவ்வாறான ஆதங்கங்களுக்கு அவமியமிருக்காது.

முதலில் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வோண்டும், ஜெனிவா என்பது நாடுகளின் ஆடுகளம். நாடுகள் ஒவ்வொன்றும் அதன் நீண்டகால இயக்குகளின் அடிப்படையில் தான் எந்தவொரு தீர்மானங்களையும் எடுக்கும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்னைநான் ஆணையாளர் நவிப்பிள்ளையே இப்படி கூறியிருக்கின்றார்.

அதாவது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது, குறுகிய தேசியவாத நலங்களாலும் புவிசார் அரசியல் போட்டிகளாலும் கட்டுப்படுத்தப்படும் ஒரு இடமாகும். ஜெனிவாவைப் புரிந்து கொள்வதற்கு இது போதுமானது. இதனை கொஞ்சம் அதிகமாக புரிந்து கொள்ள வேண்டுமாயின் முள்ளி வாய்க்கால் முடிவை எடுத்து நோக்கலாம்,

முள்ளிவாய்க்காலில் இவ்வாறானதொரு அழிவு ஏற்படும் என்பதை மேற்குலக நாடுகள் அறிந்திருந்தன. ஏனெனில் இது போன்ற பல உள் நாட்டு யுத்தங்களையும், அதன் அழிவுகளையும் மேற்குலகம் நன்கறியும். தமிழர்கள் வாழும் அனைத்திலும் புலம் பெயர் சமூகம் அமைதிவழி போராட்டங்களை முன்னெடுத்திருந்தன ஆனால் எவற்றுக்கும் மேற்கு நாடுகள் செவி சாய்க்கவில்லை. ஆனால் யுத்தம் முடிவற்றதன் பின்னர் அதே நாடுகளே, இறுதி யுத்தம் தொடர்பான பொறுப்புக் கூறல் தொடர்பில் அழுத்தங்களை பிரயோகித்தன.

2012இல் அமெரிக்க ஆதரவுடன் இலங்கையின் மீதான முதலாவது பிரேரணை கொண்டு வரப்பட்டது. அந்த பிரேரணையை அப்போதிருந்த ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ல ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் காரணமாகயே மேற்குலக அழுத்தங்கள் தொடர்ந்தன. தொடர்கின்றன. ஒரு வேளை மகிந்த ராஜபக்ச மேற்குலகின் கோரிக்கைகளுக்கு இணங்கியிருந்தால் ஜெனிவா அரசியல் அப்போதே முடிந்து போயிருக்கும்.. மகிந்த ராஜபக்ஷவின் யுத்த வெற்றி வாதங்கள் வீறாப்பால் தான், இன்று வரையில் இலங்கையின் மீதான அழுத்தங்கள் தொடர்கின்றன.

எவ்வாறு அன்று இந்தியாவின் தலையீட்டிற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வெளிவிவகார அணுகுமுறை காரணமாக இருந்ததோ, அதே போன்று தான், மகிந்த ராஜபக்சவின் வெளிவிவகார அணுகுமுறை மேற்குலக – குறிப்பாக அமெரிக்க அழுத்தங்களுக்கு வழி வகுத்தது. ஜே–ஆர் ஜெயவர்த்தனா இந்திராகாந்தி நிர்வாகத்துடன் இணங்கிப் போயிருந்தால், இந்தியா ஒரு போதுமே தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளித்திருக்காது அத்துடன் இராணுவ ரீதியான தலையீட்டையும் செய்திருக்காது. அன்றிருந்த உலக ஒழுங்கில் பிராந்திய சக்தியான இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகளை ஜே.ஆர் புறம் தள்ளி செயற்பட்டதன் காரணத்தினால் தான், இந்தியா அதன் கடுமையான முகத்தை காண்பிக்க முயற்சித்தது.

இந்தியாவின் தலையீட்டோடு மேற்குலக தலையீட்டை ஒப்பிட முடியாது ஆனால் இரண்டு தலையீட்டிற்கும் இடையில் சில ஒத்த பண்புகள் இருக்கின்றன.

இரண்டுமே, கொழும்பின் ஆட்சியாளர்களின் கொள்கை தவறுகளின் விளைவாகவே இடம் பெற்றது. யுத்த வெற்றியை தனது அரசியல் முதலீடாக்கிக் கொண்ட ராஜபக் சகோதரர்கள், யுத்த வெற்றிக்கு பக்கபலமான காரணங்களை புறாத்தள்ளி செயற்பட்டனார். தங்களது திறமையினால் தான் யுத்தத்தில் வெற்றி பெற்றதானா போலி மாயை ஒன்றுக்குள் சிங்கள மக்களை வைத்திருக்க விரும்பினர். இது அவர்களது குடும்ப அரியலுக்கு தேவைப் பட்டது. உண்மையில் ராஜபாக்சகளின் திறமையினால் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒட்டுமொத்த உலகமே இருந்தது. விடுதலைப் புலிகளுக்கு தற்காப்பு ஆதரவை வழங்குவதற்கு எந்தவொரு நாடும் இருந்திருக்கவில்லை ஆனால் மறுபுறமோ, மகிந்த ராஜபக்சவின் யுத்தத்திற்கு அனைத்து தரப்புக்களும் ஆதரவு வழங்கியிருந்தன.

குறிப்பாக ஜோர்ஜ் புஷ் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்தின் பயங்கரவாதம் தொடர்பான பார்வையாயானது, நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களில் தடங்கல்களை ஏற்படுத்தியிருந்தது.

1997–ஆம் ஆண்டு அமெரிக்கா விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பட்டியிலிட்டது. ஆனாலும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை முக்கியமான இடத்தில் ஒரு போதும் இருக்கவில்லை. தெற்காசியாவை பொறுத்தவரையில், அமெரிக்காவின் அணுமுறை, எப்போதுமே பிராந்திய சக்தியான இந்தியாவை மையப்படுத்தியதாகவே இருந்தது. சமாதான முன்னெடுப்புக்களிலும் அமெரிக்கா பெரிய ஈடுபாட்டை கொண்டிருக்கவில்லை ஆனால் பயங்கரவாதம் தொடர்பான கொள்கை நிலைப்பாட்டின் வழியாகவே இலங்கை நோக்கப் பட்டது.

அந்த நேரத்தில் வெளியான வோல்ரீட் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில், இலங்கையின் சமாதான முன்னெடுப்பு தொடர்பில் இவ்வாறு எழுதப் பட்டிருந்தது. அதாவது, பயங்கரவாதத்திற்கு இராணுவ ரீதியான தீர்வில்லை என்று சொல்லப்படுமாக இருந்தால், உலகில் அதற்கான பதில் இரண்டு சொற்கள் தான் அதாவது, ஸ்ரீலங்கா, ஆனால் ரணில் விக்கிரமமிங்கலை அதிகாரத்திற்கு கொண்டு வர வேண்டுமென்பதில் அப்போதிருந்த குடியரசு கட்சி நிர்வாகத்திற்கு குறிப்பாக அப்போதைய உதவி ராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆமிட்ரேஜ் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பித்ததாக, இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக இருந்த ஜெப்ரி லுன்ஸ்டட் எழுதியிருக்கின்றார்.

ஆனால் இரண்டு ஜனாதிபதி தேர்தலில், விடுதலைப்புலிகள் தேர்தலை பகிஸ்கரிக்குமாறு கூறியதன் பிரகாரம், தமிழ் மக்கள் தேர்தலில் பங்களிக்கவில்லை. இதன் விளைவாக சொற்ப வாக்கு வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்டி வெற்றி பெற்றார். இதன் பின்னர் நிலைமைகள் வேகமாக மாற்றமடைந்தன. அதுவரையில் விடுதலைப் புலிகளை தடை செய்திராத ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா ஆகியவையும் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டன. ஒட்டுமொத்த மேற்குலக தாராளவாத நாடுகளும் விடுதலைப் புனிகளை வெறுத்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மகிந்த ராஜபக்ச யுத்தத்தில் வெற்றி பெற்றார். மேற்குலகம் விடுதலைப் புலிகள் மீது மேலும் அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலம், அவர்களை இறங்கி வரச் செய்யும் உக்தியையே பிரயோகித்தது. ஆனால் அது எதிர்மறையான விளடிவுகளையே கொடுத்தது அத்துடன் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான உத்வேகத்தையே மகிந்த ராஜபக்ச அரசிற்கு வழங்கியது.

1992 இல் இந்தியா புலிகளை பயங்கரவாத அமைப்பாக பட்டியிலிட்டது. அமெரிக்கா 1997 இல் பட்டியிலிட்டது. முழு மேற்குலகமும் இறுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக திரும்பியது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் ராஜபக்ஷக்களினால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி பெற முடிந்தது.

அதாவது, விடுதலைப் புலிகளின் கையறு நிலை ராஜபக்ஷக்களின் வெற்றியானது. மற்றும்படி ராஜபக்ஷக்களின் திறமையினால் விடுதலைப் புலிகள் வெற்றி கொள்ளப்படவில்லை. ஆனால் ஒட்டுமொத்த உலகின் ஆதரவுடன் புலிகளை பெற்றி கொண்ட மகிந்த ராஜபக்ஷ, யுத்த வெற்றிக்கு பின்னர், இந்தியாவையும் மேற்குலகையும் உதாசீனம் செய்யும் வகையிலேயே செயற்பட்டார். சீன சாப்பின் மூலம் மேற்குலகை எதிர் கொள்ளலாம் என்னும் குருட்டு நம்பிக்கையை வெளிவிவகார கொள்கையாக வரித்துக் கொண்டார். இந்த இடம் தான், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கத் தொடங்கிய இடமாகும். 2011இல், அமெரிக்காவின் வாரவாய் தீவில் இருக்கும் ஈஸ்ட் வெஸ்ட் சென்ரர் என்னும் முன்னணி சிந்தனைக் கூட நிகழ்வில், அப்போதைய அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் பசுபிக் ரென்ளரி என்னும் தலைப்பில் உரையொன்றை ஆற்றியிருந்தார். அந்த உரையில், ஆசியா, அமெரிக்காவின் தலைணமத்துவத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார். இந்தக் காலத்தில் தான், பராக் ஒபா

(22ம் பக்கம் பார்க்க)





# ராகுலின் நடை பயணத்தால் துளிக்குமா காங்கிரஸ்?

தமிழகத்திலிருந்து காங்கிரஸ் கட்சி தொடங்கி இருக்கும் 'இந்திய ஒற்றுமை நடைபயணம்' அக்கட்சிக்கு எவ்வகையிலான பலனை அளிக்கும் என்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் வெளிக் கிளம்பியுள்ளன.

பாதயாத்திரை என்பது அரசியல் கட்சிகளுக்கும், வெகுஜன மக்களுக்கும் இடையேயான அரசியல் ரீதியிலான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்மொரு உத்தி என்ற பார்வை பொதுவாகவே





உள்ளதோடு, பாதயாத்திரைகள் அரசியல் தலைமைகளுக்கு வெற்றிகளை அளித்த வரலாறுகளே அதிகமுள்ளன.

இந்நிலையில், அரசியல் ரீதியில் பா.ஜ.க.விற்கு எதிரான மாற்று அரசியல் சக்தி காங்கிரஸ் தான் என்பதை அக்கட்சி நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், இத்தகைய நடைபயணத்தை அக்கட்சி மேற் கொண்டிருப்பது பொருத்தமான அணுகுமுறை தான் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில், இந்திய அரசியலில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், தற்போதைய வயநாடு தொகுதி மக்களவை உறுப்பினருமான ராகுல் காந்தி தலைமையில் அக் கட்சியினர் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை மேற்கொள்ளும் 'இந்திய ஒற்றுமை' நடை பயணம், தமிழக அரசியலில் மட்டுமலலாமல் தேசிய அரசியலில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

எதிர் பார்க்கப்பட்டதை விட கூடுதலான ஆதரவு 'இந்திய ஒற்றுமை' நடைபயணத்திற்கு கிடைத்து வருவதால் கடும் ஆத்திரத்திற்குள்ளான பா.ஜ.க., இது தொடர்பாக தங்களது எதிர்ப்பினை சமூக வலைதளத்தில் பதிவிட்டு வருகிறது. உதாரணமாக உள்துறை அமைச்சராகவும், பா.ஜ.கவின் சக்தி மிக்க தலைவர்களில் ஒருவராகவும் திகழும் அமித்ஷா நடை பயணத்தை மேற் கொள்ளும் ராகுல் காந்தி அணிந்திருக்கும் சேட் இந்தியாவில் தயாரிக்கப்பட்டதல்ல என்றும், அவர் இந்தியாவின் வரலாற்றை படிக்க வேண்டும் என்றும் பதிவிட்டிருக்கின்றமை அக்கட்சியின் மனோநிலையை அம்பலப்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறிருக்கையில், சுதந்திரத்திற்குப் பிறகு ஜனதா கட்சியின் தலைவர் சந்திர சேகர் கன்னியாகுமரியிலிருந்து டெல்லி வரை நான்காயிரம் கிலோ மீற்றர் பாதை யாத்திரை மேற்கொண்டார். இதன் மூலம் அவர் ஜனதா கட்சி கட்சியை இந்தியா முழுவதும் உயிர்ப்புடன் பணியாற்ற வைக்க முடிந்தது. அவர் தேசிய தலைவராகவும் உயர்ந்தார்.

ஆந்திராவில் ராஜசேகர ரெட்டி மற்றும் அவரது புதல்வரும், தற்போதைய முதல் வருமான ஜெகன்மோகன் ரெட்டி, சந்திர பாபு நாயுடு ஆகியோர் மாநிலம் முழுவதும் பாதயாத்திரை மேற்கொண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர்.

தமிழகத்திலும் தி.மு.கவின் தலைவரான கருணாநிதி தலைமையில், மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையிலான 200 கிலோ மீற்றர் நீதிவேண்டி பாத யாத்திரை மேற்கொண்டார். அப்போதைய முதல்வராக இருந்த எம்.ஜி. ஆருக்குப் அந்த நடைபயணம் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

காவேரி பிரச்சினைக்காக வைகோ நடைபயணம் மேற்கொண்டார். இவர் மேற் கொண்ட நடைபயணங்களால் அக்கட்சி தற்போதுவரை உயிர்ப்புடன் இயங்கி வருகிறது. எனவே அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால், ராகுல் காந்தி மேற் கொண்டிருக்கும் இந்திய ஒற்றுமை நடைபயணம், சரியான பாதையில், சரியான நேரத்தில், எடுக்கப்பட்ட உத்வேகமான முடிவு என்பதில் மாற்றுக் கருத்திற்கு இட மில்லை.

அதேதருணத்தில் இந்துத்துவா, சனாதன தர்மம், தனியார் பொருளாதாரக் கொள்கை போன்றவற்றில் உறுதியான நம்பிக்கையுடன் பயணிக்கும் பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு, ராகுல் காந்தியின் நடைபயணத்தை ஆரம்பத்தில் பொருட்டாக கொள்ளாது விட்டாலும் தற்போது, ராகுல் காந்தி, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் வலிமையாக உள்ள மாநிலங்களில் மட்டுமே நடைபயணத்தை மேற் கொள்கிறார் என்று விமர்சனங்களை முன் வைத்து இருட்டடிப்புச் செய்வதற்கு கடும் பிரயத்தனத்தினை மேற்கொண்டு வருகின்றது.

அதேநேரம், விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் குஜராத் மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களில் ராகுலின் நடைபயணம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அவரது நடைபயணம் பா.ஜ.கவிற்கு எதிரானது அல்ல என்றும், காங்கிரஸ் கட்சியின் தலைவராக அவர் வரவேண்டும் என்பதற்காக, அவர் அவரது ஆதரவு தலைவர்களின் ஆலோசனையுடன் மேற்கொள்ளும் உட்கட்சி உத்தி எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

காங்கிரஸ் கட்சியின் தலைவருக்கான தேர்தல் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டுக்களை ஒட்டுமொத்தமாக விலக்கிவிட முடியாத நிலைமைகளும் இல்லாமில்லை.

நடைபயணத்தின் மூலமாக நாடு முழுதும் உள்ள காங்கிரஸ் கட்சியில் தொண்டர்களையும், நிர்வாகிகளையும் சந்திப்பதற்கு ராகுலுக்கு வாய்ப்புக்கள் கிடைப்பதால் அவர் தான்தான் தலைவர் என்பதை உணர்த்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன என்ற தர்க்கத்தில் நியாயங்கள் உள்ளன.

இவ்வாறிருக்கையில், ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நடைபயணம் குறித்து தமிழக பா.ஜ.க. தரப்பில் வலிமையான எதிர்ப்புகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. வானதி சீனிவாசன் உள்ளிட்ட சில தலைவர்கள் மட்டுமே பெயரளவிற்கு தங்களது எதிர்ப்புகளை பதிவு செய்திருக்கிறார்கள்.

மறுபக்கத்தில் தமிழகத்திலிருந்து ராகுலின் நடைபயணத்தை ஆரம்பித்து வைத்த முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.கவுக்கும் ஆளுநர் ரவிக்கும் இடையே மீண்டும் மோதல்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. குறிப்பாக நீட் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மற்றும் ஆளுநர் ரவி ஆகியோர்களின் நடவடிக்கைக்கு, தி.மு.க. கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது.

அத்துடன் தெலுங்கானா மாநிலத்தில் ஆளுநராக பணியாற்றும் திருமதி தமிழிசை சௌந்தரராஜனுக்கு, அந்த மாநில அரசு பாதுகாப்பு விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்காத விவகாரத்தையும், அவர்களை சிறுமைப்படுத்தும் விவகாரத்தையும் பட்டியலிட்டு, இது போன்றதொரு நிலை தமிழக ஆளுநருக்கு ஏற்படக்கூடும் என்ற எச்சரிப்பும் வெளிப்பட்டுள்ளது.

அத்துடன் நீட் தேர்வு தேர்ச்சி குறித்து தி.மு.க. வழக்கமான புள்ளி விவரங்களுடன் இந்த தகுதி தேர்வின் நிலையை கேள்விக்கு உள்ளாக்கி இருக்கிறது. இதற்கு பா.ஜ.க. ஆதரவு கல்வியாளர்கள் இதுவரை பதிலளிக்கவில்லை. இதன் மூலம் தி.மு.க. நீட் தேர்வு விவகாரத்தில் தொடர்ந்து ஒரே நிலைப்பாட்டில் இருந்து வருவதை காணமுடிகிறது அத்துடன், காங்கிரஸின் நடைபயண அரசியலில் மக்களின் கவனம் குவிவதை திசைத்திருப்பதற்காக தமிழக பா.ஜ.க. முன்னெடுத்திருக்கும் நீட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான வாழ்த்து எனும் அரசியல் ஆயுதம், தி.மு.கவினரால் வீழ்த்தப்பட்டிருக்கிறது. இதனால் மீண்டும் பா.ஜ.க. அரசியல் களத்தில் பின்னடைவை எதிர் கொண்டிருக்கிறது என்பதே யதார்த்தமாகின்றது.

இதே தருணத்தில் காங்கிரஸின் நடைபயண அரசியலைத் திசை திருப்புவதற்காக பா.ஜ.க.வின் கூட்டணி கட்சியான அ.தி.மு.க.வும், தன் பங்கிற்கு மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கண்டன போராட்டத்தை அறிவித்துள்ளது. எடப்பாடி பழனிச்சாமி அ.தி.மு.கவின் இடைக்கால பொதுச் செயலாளர் என்ற பதவி நீதிமன்ற உத்தரவுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றது.

அதேவேளை, பன்னீர்செல்வத்தின் அலுவலகத்தினை திறப்பதற்கான தடைக்


> **கட்டுரையாளர்:**
> **தமிழகத்தில் இருந்து**
> **- குடந்தையான் -**

கோரிக்கை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாலும் உற்சாகமாகியிருக்கும் எடப்பாடி, தமிழக அரசு எதிரான விடயங்களை பட்டியலிட்டு களமிறங்குவதற்கு தயாராகிவிட்டார்.

இந்நிலையில் அ.தி.மு.கவின் வலிமையான இரண்டாம் கட்ட தலைவராக கருதப்படும் முன்னாள் அமைச்சர் வேலுமணியை இலக்கு வைத்து மீண்டும் இலஞ்ச ஒழிப்பு துறையினர் சோதனை நடத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் மீண்டும் தி.மு.க. எதிர் அ.தி.மு.க. இடையேயான அரசியல் யுத்தம் தொடங்கப்பட்டிருக்கிறது.

இதற்கு காங் கிரஸ் கட்சி மேற்கொண்ட இந்திய நடைப்பயண அரசியலே காரணம் ஒருவகையில் காரணமாகியுள்ளது.


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE
635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104
"ஐயனை நாடுங்கள்! அவன் புகழ் பாடுங்கள்!
என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்"



**புரட்டாதி சனிவார வழிபாடும், தோஷ நிவர்த்தி மஹா யாகமும்**
**சனி வாரங்கள்: 17.09.2022, 24.09.2022, 01.10.2022, 08.10.2022, 15.10.2022**

மெய்யடியார்களே!
கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் தனி சன்னிதானமாக எழுந்தருளி அருள் பாலித்து வரும் ஸ்ரீ ஐயப்ப பெருமானுக்கு கட்டுப்பட்டு திருவருள் புரியும் ஸ்ரீ சனீஸ்வர பெருமானுக்கு அபிஷேகம், எள் எண்ணெய் தீபமேற்றுதல், அர்ச்சனை, தண்ணீர்க் கூட அபிஷேகம் போன்ற பரிகார வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஆயுள், வாகனம், தொழில், ஆரோக்கியம் போன்ற நற்பலன் வேண்டி அடியார்கள் தவறாது புரட்டாதி மாதச் சனி வாரங்கள். தோஷபரிகார வழிபாடுகளில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். (ஆலயம் காலை 7:00 மணிமுதல் இரவு 9:15 மணிவரை திறந்திருக்கும்)

**சனீஸ்வர தோஷ நிவர்த்தி மஹாயாகம்**
மாத ஐந்து வாரங்களும் தோஷ பரிகாரங்களில் உயர்வான பலன் தரக்கூடிய மஹாயாகம் நடைபெற உள்ளது. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, சனிதிசை, சனிபுத்தி ஜாதகத்தில் சனிதோஷம் போன்ற பாதிப்புள்ளவர்கள் நற்பலன் வேண்டி மஹாயாகத்தில் உங்கள் கைகளினால் பூர்ணாகுதியிட்டு தோஷ நிவர்த்தி பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.
(யாகம் காலை 9:00 மணி முதல் பகல் 12:30 மணிவரை நடைபெறும்)

**நவராத்திரி விரதாரம்பம்**
**காலம்: 26.09.2022 திங்கட்கிழமை - 04.10.2022 செவ்வாய்க்கிழமை**
கல்வி, செல்வம், வீரம் வேண்டி வழிபடும் நவராத்திரி விரதத்தில் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவிகளையும், கொலு மண்டபத்தில் கும்பம் வைக்கப்பட்டு, படிகளில் அழகிய கொலு பொம்மைகள் வைக்கப்பட்டு, சிறப்பு அபிஷேகப் பூஜை, கலை நிகழ்ச்சிகள், குங்கும அர்ச்சனை, ஸ்ரீசக்கர நவாபரண பூஜை ஹோமம் பலிசுஹாசினிபூஜை போன்றன சிறப்பாக நடைபெற்று 10ஆம் நாள் விஜய தசமியன்று பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வும், மாலை மானம்பூ உற்சவமும் (வாழை வெட்டு) நடைபெறும்.


மாலை 6:00 மணிக்கு அபிஷேகப் பூஜை
மாலை 7:00 மணிக்கு ஸ்ரீ சக்கர நவாபரண பூஜை, ஹோமம் பலி
மாலை 8:00 மணிக்கு கலை நிகழ்ச்சிகள், வசந்த மண்டப பூஜை
இரவு 9:00 மணிக்கு பிரசாதம் வழங்குதல்


**இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்**
விசேட நாட்களில் பூஜை நேரங்கள் மாற்றப்படலாம். THE POOJA TIME MAY BE CHANGED ON SPECIAL OCCASIONS.



வாழும்போது வாழ்த்துவோம்
திருமதி வரதா சண்முகநாதன்
அவர்களுக்கு
பாராட்டு விழா
SUN
OCT
16th
5 p.m
இடம்: தமிழிசைக் கலாமன்றம்
1120 Tapscott Rd #3, Scarborough, ON M1X 1E8
நாள்: 16-10-2022 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 5 மணி
416 439 0505 | 647 205 7301 | 416 949 7795
கனடா வாழ் வேலணை உறவுகள்
Sponsors
CashPoint
The Buck Starts Here!
Platinum
CAR & TRUCK RENTAL
SUVAIYAKAM
சுவையகம்
Catering & Take out


வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..
Buying / Selling / Leasing
$ 869,900
Scarborough
Brimley Rd/Lawrence Ave E
Detached Bungalow
Bedrooms: 2 + 2
Washrooms: 2
Sep Entrance/ Updated
$ 899,000
Scarborough
Morningside/Nightstar
Att/Row/Twnhouse 2-Storey
Bedrooms: 4
Washrooms: 3
Sep Entrance / End Unit
$ 1,200,000
Scarborough
Morrish & Ellesmere Road
Detached 2-Storey
Bedrooms: 3 + 2
Washrooms: 4
Highland Creek Community
$ 799,000
Scarborough
Brimley/Danforth
Detached 2-Storey
Bedrooms: 2
Washrooms: 2
Sep Entrance/Updated
$ 1,250,000
Scarborough
Middlefield & Finch
Detached 2-Storey
Bedrooms: 4 + 1
Washrooms: 4
Sep Entrance/Original Owner
$ 1,098,000
Markham
Hwy 7 / Robinson
Detached 2-Storey
Bedrooms: 4 + 1
Washrooms: 3
Renovated
$ 999,999
Markham
Markham Rd. & 16th Ave.
2-Storey
Bedrooms: 3 + 1
Washrooms: 4
Upgrades
$ 1,088,000
Vaughan
Dufferin/Major Mckenzie
Detached 2-Storey
Bedrooms: 4
Washrooms: 4
Upgraded
$ 1,275,000
Pickering
Whites/N Of Sheppard
Detached 2-Storey
Bedrooms: 4 + 2
Washrooms: 4
Sep Entrance/ Updated
$ 899,000
Ajax
Harwood & Rossland
Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 4
W/O- Well Maintained
கமல் நவரட்ணம்
KAMAL
NAVARATNAM
Sales Representative
Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
Office:
416-287-2222
Fax:
416-282-4488
1265 Morningside Ave.,
Suite 203, Toronto,
ON M1B 3V9
KAMAL
NAVARATNAM
REAL ESTATE
Trusted and reliable services


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும். திடீர் பயணங்கள் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் தொடர்பான விஷயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும். கடவுள் வழிபாடு செய்து வரவும்.



ரிஷபராசி அன்பர்களே! எதிர்ப்புகள் அகலும். எல்லா நலன்களும் உண்டாகும். விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. தனாதிபதி குருவின் சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். பயணம் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். அரசாங்கம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பல விதத்திலும் புகழ் கூடும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும்.


மிதுனராசி அன்பர்களே! எதிர்பார்த்த காரியம் வெற்றிகரமாக நடந்து முடியும். எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். பிடிவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் மெத்தன போக்கு காணப்படும். குடும்பத்தினரின் செயல்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்நண்பர்களுடன் இருந்த பகை நீங்கும்


கடகராசி அன்பர்களே! உங்களின் சொல்லாற்றலும், செயலாற்றலும் அதிகரிக்கும். தடைபட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வீண் மன குழப்பங்கள் ஏற்பட்டாலும் முடிவில் தெளிவு உண்டாகும். வீண் கனவுகள் தோன்றும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சின்ன விஷயத்திற்காக கூட அலைய வேண்டி இருக்கும். பணிச்சுமை காரணமாக திடீர் கோபம் உண்டாகலாம்.


சிம்மராசி அன்பர்களே! நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். தைரியம் உண்டாகும். தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். தேவையான பண உதவி கிடைப்பதிலும், உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். குடும்பத்தில் திடீர் பிரச்னைகள் ஏற்படலாம். குடும்ப செலவுகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்கள் மூலம் வர வேண்டியவை தாமதப்படும்.



கன்னிராசி அன்பர்களே! வீண் கவலை அகலும். எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டாகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில், வியாபாரம், லாபகரமாக நடக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாக செய்து முடிப்பர்.



துலாம்ராசி அன்பர்களே! காரிய வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். மற்றவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கவுரவம் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் போட்டிகளை திறம்பட சமாளிப்பீர்கள். உத்யோகத்தில் தங்களது திறமையால் அலுவலக பணியை சிறப்பாக செய்வர். சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு விளக்கேற்றவும்.



விருச்சிகராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு நல்ல பலன்கள் உண்டாகும். இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். அவ்வப்போது ஏதாவது தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தொழில், வியா பாரத்தில் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் பிரச்னைகள் குறையும். உத்யோகஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டு கிடைக்கும்.




தனுசுராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும். வழக்குகளில் இருந்து வந்த மந்தநிலை மாறும். மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்னைகளில் எதிர்பாராததிருப்பங்கள் ஏற்படும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். சிறப்பாக செயல்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். உத்யோக வாய்ப்புகள் வரும்.


மகரராசி அன்பர்களே! நீங்கள் எடுக்கும் விடாமுயற்சி நல்ல வெற்றியை கொடுக்கும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டு சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். சுபச் செலவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். கடன் பிரச்னைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும்.


கும்பராசி அன்பர்களே! கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.


மீனராசி அன்பர்களே! சுணங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். சுப நிகழ்ச்சிகளில் இருந்த தடைகள் அகலும். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்க பெறுவர். குடும்பத்தினருக்கு அத்தியாவசிய தேவை களை பூர்த்தி செய்வீர்கள். தம்பதிகளிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பின்னடைவு குறித்த மறுபரிசீலனை

(17ம் பக்கத் தொடர்ச்சி) கட்சிகளையும் விட மக்கள் வளர்ச்சியடைய வேண்டும். பலமடைய வேண்டும். அதற்கான மாற்று அரசியலே தேவை. இதற்கான உள்ளடக்கத்தைக் கொண்ட கட்டமைப்பு அவசியம். எதிர்ப்பரசியல் என்பது அரச எதிர்ப்பு என்பதற்குப் பதிலாக மக்களுக்கு எதிரான அரசியலாக மாறியுள்ளது. அதுவே இப்பொழுது நடந்து கொண்டிருப்பது.

ஆனால் இதைக் குறித்து யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் லாப நட்டக் கணக்கைப் பார்க்காமலே (தனிப்பட்ட வாழ்க்கையில் மிகத் திறமையாக லாப நட்டக்கணக்கை ஒவ்வொருவரும் பார்த்து விடுகிறார்கள்) கண்மூடித்தமாக இந்தப் பயனற்ற தலைமைகளுக்குத் தங்களின் பலத்தையும் வளத்தையும் தாரை வார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இதனால், தாங்கள் நம்புகின்ற, தங்களுக்கு விரும்பமானவற்றிலிருந்து (இந்தக் கட்சிகளையும் தலைமைகளையும் விட்டு) இலகுவில் வெளியே வரமுடியாமலிருக்கிறது. இதனால்தான் மக்களுடைய எந்தப் பிரச்சினைகளும் தீர்வைப் பெறாமல் தொடர்கின்றன. மக்களுடைய அனைத்துக் குறைபாடுகளும் அப்படியே உள்ளன. போதாக் குறைக்கு மேலும் பல பிரச்சினைகளும் குறைபாடுகளும் பெருகிக் கிடக்கின்றன.

அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு அப்பால். தன்னுடைய சமூகச் சூழலில் மிகச் சாதாரணமான சமூகப் பிரச்சினைகளைக் கூடத் தீர்க்க முடியாமல் சீரழிந்து கிடக்கிறது தமிழ்ச்சமூகம். பாடசாலைகளில் கூட பாலியல் துஸ்பிரயோகங்கள் நடக்கின்ற அளவுக்கு எல்லாமே கெட்டு விட்டன. மணல் அகழ்வு, காடழிப்பு கள்ள மரம் வெட்டுதல் தொடக்கம் போதைப் பழக்கம், போதைப் பொருள் வியாபாரம் என அனைத்து நிலைகளிலும் சீரழிந்து கிடக்கக் காண்கிறோம்.

ஆனால், தங்களைச் சுற்றிய நெருக்கடிகளிலிருந்து விடுபட வேண்டும். ஒடுக்கு முறையிலிருந்து விடுதலையடைய வேண்டும் என்றே கடந்த ஐம்பது வருடங்களாக தமிழர்கள் பெரும் போராட்டத்தை நடத்தினர். இதற்குப் பதிலாக இன்று பெற்றிருப்பது…ஆளுமையற்ற தலைமைகளும் அக்கறையற்ற கட்சிகளும் சீரழிந்த சமூக நிலையும் நெருக்கடியான வாழ்க்கையுமே. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கைக் கையில் ஏந்திய கதை. இதை மாற்றியமைக்க வேண்டும் என்றால்…..

அதிகமாகச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. முதலில் தமிழ்ச் சமூகத்துக்கு விரோதமாகச் செயற்படுகின்ற தலைமைகளிலிருந்தும் கட்சிகளிடமிருந்தும் விடுதலையாக வேண்டும். அதாவது மக்களை ஏமாற்றும் கயமைக் கூட்டத்திலிருந்து விடுதலையாக வேண்டும். இது 1970 களின் இறுதியில் இளைஞர் இயக்கங்கள் எடுத்த தீர்மானத்துக்கு நிகரானது. வரலாறு அதையே திரும்பவும் நிர்ப்பந்திக்கிறது. அதேவேளை கடந்த கால வரலாற்றுப் படிப்பினைகளிலிருந்து நாம் பாடங்களைப் படித்துக் கொள்ள வேண்டும். மீண்டும் சறுக்கும் அரசியலைத் தெரிவு செய்யாமல், வெற்றியைப் பெறுவதற்கான சமத்துவ அரசியலை, ஜனநாயக அரசியலை, அறிவு பூர்வமான அரசியலை, விடுதலைக்கான அரசியலைச் மேற்கொள்ள வேண்டும். அது ஒன்றே வழி.

# ஜெனிவா அரசியலைப் புரிந்து கொள்ளுதல்

(22ம் பக்கத் தொடர்ச்சி) தலைமையிலான அமெரிக்க நிர்வாகம், ஆசியாவையையாளுவதற்கான கொள்கையான ஆசிய மையக் கொள்கை தொடர்பில் விவாதிக்கின்றது, புஷ் நிர்வாகத்தினால் நிராகரிக்கப்பட்ட ஐ.நா.மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயற்படும் கொள்கை நிலைப்பாட்டை ஒபாமா நிர்வாகம் எடுக்கின்றது. இந்த பின்புலத்தில் தான் 2012,ல் இலங்கையின் இறுதி யுத்தத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்பு கூறலை வலியுறுத்தி, அமெரிக்காவின் பிரேரணை, மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த பின்புலத்தில் தான் ஜெனிவாவில் மேற்கொள்ளப்படும் பிரேரணைகளையும் அதன் உள்ளடக்கங்களையும் நாம் நோக்க வேண்டும். ஜெனிவாவிற்கு செல்வதால் எந்தவொரு மாற்றங்களையும் ஏற்படுத்த முடியாது. ஏனெனில் முடிவுள் பலம் பொருந்திய நாடுகளின் வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் எடுக்கப்படுகின்றன. தங்களது நலன்களின் அடிப்படையிலேயே முடிவுகளை அவர்கள் எடுப்பார். நாங்கள் விரும்பியது நடக்கவில்லையே என்று ஆதங்கப்படும் இதில் எவ்வித பொருளும் இல்லை.

ஏனெனில் தமிழர்களின் ஒப்பாரி, கண்ணீரை கண்டு இரங்கி இந்த முடிவுகள் எடுக்கப்படவில்லை . உதாரணமாக பிரேரணை தொடர்பில் தமிழர்கள் எவருமே பேசாமல் இருந்தாலும் கூட, பிரேரணை வரும். விடயங்கள் இடம்பெறும், ஒரு சில சிறிய மாற்றங்களையாவது ஏற்படுத்துவதற்கு தமிழர்கள் இது தொடர்பில் பேசுவது, வேண்டுமானால் அறியப்படலாம். அது கூட பாரதூரமானதாக இருக்காது. அவர்களுக்கு எப்போது விடயங்கள் மீது சற்று அழுத்தத்தை அதிகரிக்க வேண்டுமென்று எண்ணுகின்றார்களோ, அப்போது எவரும் பேசாமலேயே விடயங்கள் இடம் பெறும்.

# குருந்தூர்மலை காணி அபகரிப்பு!

(3ம் பக்கத் தொடர்ச்சி) பதற்றம் ஏற்பட்டது. இந்நிலையில், அங்கு கொட்டன்கள், துப்பாக்கியுடன் நின்றிருந்த ஏராளமான பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டனர். பொலிஸாரின் நடவடிக்கையை கண் டித்த போராட்டக்காரர்கள், அந்தப் பகுதியில் கட்டுமானப் பணிகள் எதுவும் மேற்கொள்ளக் கூடாது என்ற நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாரிடம் தெரிவித்தனர். பொலிஸார் எந்த உத்தரவும் பிறப்பிக்காத அதே சமயம் ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து செல்லுமாறு கூறினர்

# மகாராணியின் இறுதிச் சடங்கிற்கு சென்று

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. இதனால் ஜஸ்ரின் ட்ரூடோ கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகி உள்ளார். கனடா நாட்டினர் பலரும் சமூக வலைத்தளங்களில் ஜஸ்ரின் ட்ரூடோவை விமர்சித்து கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர். அதில் ஒருவர் 'ராணியின் மறைவுக்கான துக்கத்தில் கனடாவை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இப்படி பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டது அவமானம்' என குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாடு பத்திரிகை
தொடர்புகளுக்கு 416 841 9600

வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

வீடு HOME

வாகனம் AUTO

மோட்டர் சைக்கிள் MOTOR CYCLE

படகு BOAT

கனரக வாகனம் TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!

THUSHANTHAN RAVINDRAN

647-401-2653

Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

## Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

### *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)




மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
(RABINTHIRARAJ)
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500




அபாயம் உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer | 1 woman in 8
Prostate Cancer | 1 man in 7
Heart disease | 1 person in 4
Stroke (CVA) | 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer | 60%
Heart Attack | 85%
Stroke | 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown*
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.